
# விக்கினேஸ்வரம்

VIGNESWARA COLLEGE
TRUTH TRIUMPHS
KARAVEDDY



**WALLINGTON HALL**
**8 Stafford Road**
**Wallington**
**Surrey**
**SM6 - 9AQ**

**July 25**
**2010**

# Letzmove Property Ltd

*... let us work for you*

## Lettings

### Looking to Rent

We have large selection of properties available to Rent in Following areas:
Tooting - Mitcham - Collierswood
Malden - Streathem - Croydon - etc..



## Landlords

Lower Commission
Best Rent Achieved
Free Valuation - No Obligation
Professional Tenants
Tenants Referencing
Inventory Prepared

## Sales

Lower Commission
Advert on Web & Papers

புதிய பரிமாணத்துடன்
சிறந்த சேவையாற்ற...

RESIDENTIAL & COMMERCIAL ▶ SALES ▶ LETTINGS ▶ MANAGEMENT

182 Mitcham Road, Tooting, London SW17 9NJ Tel: 020 8767 5800 Fax: 020 8696 1900
Email: info@letzmoveproperty.co.uk Web: www.letzmoveproperty.co.uk

# கல்லூரிக் கீதம்

### பல்லவி

வாழ்கவே வளர்க வாழ்கவே - வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே வாழ்கவே.

### சரணம்

கலைகள், விஞ்ஞானம், கவினுடன் இங்கே
கற்றெழில் பூண்டிடுவோம்.
இலை மறை காயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக் கண்டிடுவோம்.
(வாழ்கவே)

ஆங்கிலம் , தமிழ் மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்.
தேங்கிய புகழ்தன் ஊற்றிடமாக
திறன் பணி கண்டிடுவோம்.
(வாழ்கவே)

வர்த்தகவியலும் தொழில் முறைக் கல்வி
வளர்த்திட முயன்றிடுவோம்.
நர்த்தனம், இசைகள், நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்
(வாழ்கவே)

எண்ணொடு எழுத்து என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்.
விண்ணக இன்பம் மண்ணினிற் கல்வி
என்றதைக் கூறிடுவோம்.
(வாழ்கவே)

# தலைவர் ஆசி உரை



யா/கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரித்தானியக் கிளையின் 5வது வருடாந்த கலை விழா தொடர்பாக வெளியிடும் "விக்கினேஸ்வரம்" சஞ்சிகைக்கு வாழ்த்துக்கள்

தொடர்ந்தும் இச்சங்கத்தின் தளராத முயற்சியும் அங்கத்தவர்களின் பலவித பங்களிப்பும் காரணமாக பல நல்ல விடயங்களை இச்சங்கம் நிறைவேற்றியுள்ளமை மகிழ்வைத் தருகிறது.

தொடர்ந்தும் வெற்றிகரமாக நடைபோட்டு கல்லூரிக்கும் அதுசார்ந்த சமூகத்தின் மேம்பாட்டிற்கும் பாடுபட வேண்டும் என்று வாழ்துகின்றேன்.

நன்றி

அன்புடன்

**வே. லீலாரத்தினம்**

# கல்லூரி அதிபரின் ஆசிச்செய்தி



தம்மை வளர்த்தெடுத்து தரணியில் ஆளாக்கிய அன்னை மாதாவாம் எமது கல்லூரியினை என்றென்றும் நிலை நிறுத்தி உதவும் எமது பழைய மாணவர்களை இச்செய்தியினூடு தொடர்புகொள்வதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்லூரித் தாய்க்கு நீங்கள் எடுக்கும் கலைவிழாவிற்கு ஒவ்வொருவரினதும் அர்ப்பணிப்பு எம்மவர்களை மனம் நெகிழச் செய்கிறது.

அன்னை மாதாவுக்கு நீங்கள் பெற்றுத் தந்த 8 பரப்பு காணி எம்பிள்ளைகளின் கல்வியில் நீங்கள் கொண்டுள்ள அக்கறையினை எடுத்துக் காட்டுகிறது. நிச்சயம் எங்கள் பிள்ளைகள் உயர்பரீட்சை பெறுபேறு, இணைப்பாடவிதானங்களில் பெறும் சாதனைகள் மூலம் உங்கள் கனவை நனவாக்குவர்.

இசுறு பாடசாலைத்திட்டத்தின் கீழ் ஆரம்ப பிரிவு தனியாக ஒரு பாடசாலையாக கணக்காளர் வேலாயுதம் வீட்டில் இயங்கி வருகிறது. அதற்கு கல்லூரி பழைய மாண்வர் திரு.ம.மகாகேதீஸ்வரன் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். அங்கு மாணவர்கட்கு அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் பொது நிறுவனங்களின் உதவியினை நாடியுள்ளோம்.

வருடம்தோறும் ஒன்றுகூடலை நடாத்தி எம்பிள்ளைகளின் கல்விவளர்ச்சிக்கு உந்து துணையாக நின்று செயற்படும் செயற்குழு உறுப்பினர்கட்கும் தங்கட்கும் எமது நன்றிகள்.

இவ்வேளை எமது கல்லூரி தேவைகள் பற்றி தங்கள் முன் முன்வைக்க விரும்புகிறேன். நிச்சயம் இதனை தாங்கள் நிறைவேற்றி வைப்பீர்கள் என நம்புகிறேன்.

1) கல்லூரி விளையாட்டுத்துறையில் குறிப்பாக கடினபந்து துடுப்பாட்ட ஆண், பெண் இருவரையும் மேம்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக உபகரணங்கள் கொள்வனவுக்கு உதவுமாறு வேண்டுகிறேன்.

2) கல்லூரி கணனி நிலையத்துக்கு பழையமாணவர் ஒருவரை நியமித்து அவருக்கு மாதாந்தம் ரூ5000 கொடுப்பனவு செலுத்துதல்.

3) கல்லூரி நிகழ்வுகளை உடனுக்குடன் படம்பிடித்து அதனை கல்லூரி இணையத்தளத்தில் போடவும், கல்லூரி evillage இணையத்தளத்தில் போடவும் ஒரு Digital Camera set ஒன்றை தந்துதவுமாறு வேண்டுகிறேன். எமது கல்லூரி இணையத்தளம் www.jvigneswara.sch.lk , evillage இணையத்தளம் www.evillage.lk/karaveddy

இவ்வேளையில் "நாம் தளரமாட்டோம்" எனும் வாசகத்துடன் ஒன்றிணைந்து செயற்படும் தங்களுடன் நாமும் சேர்ந்து கல்லூரித் தாய்க்கு எம்மை அர்ப்பணிப்போம் எனக்கூறி வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

# செயலாளர் அறிக்கை



Flat 3
Hasting Court
5 Parkhurst Road
Sutton
Surrey SM1 3RZ

யா/ கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஐக்கியராச்சியம்

*வணக்கத்துக்குரிய பெருமக்கள் அனைவருக்கும் !*

உங்கள் அனைவரதும் உதிவியினால் நாம் எமது கல்லூரிக்கு அருகிலுள்ள காணியை (8,00000) எட்டு இலட்சங்கொடுத்து கொள்வனவு செய்துள்ளோம். இப்பெருங்காரியத்தைச் செய்ய உதவிய உங்கள் அனைவரையும் மனதார வணங்குகிறேன். இச்சங்கத்தை ஆரம்பித்த போது பல வழிகளிலும் நம்பிக்கையற்ற வார்த்தைகளே ஒலித்தது. ஆனால் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுந்தான் இன்று இச்சங்கம் வளர்ந்து உள்ளதுடன் இப்பெருங்காரியத்தையும் நிறைவேற்றியுள்ளது. பொதுவாக உருவாக்கப்படும் இது போன்ற சங்கங்கள் நட்டத்திலேயே முடிகின்றது. ஆனால் உங்கள் உதவியும் ஆண்டவனின் அருளும் இருந்தால் ஒவ்வொரு முறையும் இலாபத்தையே எட்டி இருக்கிறோம். காலமும் ஆயுளும் வெள்ளமும் திரும்பப்பெற முடியாதது. இன்று எமது கையில் நாளை யாரிடமோ யாமறியோம் எனவே


ஒன்றே செய்யவும் வேண்டும் - என்றும்
நன்றே செய்யவும் வேண்டும் - நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் - நாளை, நாளை
என்பது நமனுடைய நாளே நாமறியோம்.

நாளை, நாளை என்று தள்ளிப் போடாது எம்மால் இயன்றவற்றை உடனும் செய்வதே நன்று. அதனை நீங்களனைவரும் செய்திருக்கிறீர்கள் அதற்கு நாமெல்லோரும் பெருமைப்பட வேண்டும், நாம் செய்த நன்மையும் தீமையும் எம்முடன் சிலரின் தயாள குணத்தினாலும் நாம் சிறிது பணமீட்டக்கூடியதாக இருந்தது. மண்டபத்தை இலவசமாக தந்து உதவிய சிவயோக அறங்காவலர்கட்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன் அடுத்து எமது பொருளாளர் இ. பத்மசிறி இலவசமாக விற்பனைச்சீட்டுக்கள் அடித்துத்தந்து உதவிடுவார் அவருக்கும் அவர் குடும்பத்திற்கும் நன்றி. திரு. கர்ணன் அவர்கள் இலவசமாக குடி பானங்கள் வழங்கினார் அவரும் அவருடைய குடும்பத்தவர்கட்கும் நன்றிகள். முதல் முதல் இலவசமாகவும் பின்பு சிறிது பணத்துடன் படங்களை எடுத்துத் தந்த திரு. சிவநாதன் அவர்கட்கும் அவரது குடும்பத்தினருக்கும் நாம் என்றும் நன்றி கூறுவதுடன் தொடர்ந்தும் உங்கள் உதவிகளை வேண்டிநிற்கின்றோம்.

இதில் பாடசாலை வளர்ச்சி மட்டுமல்ல உங்கள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளின் வளர்ச்சியும் தங்கியுள்ளதுடன் எமது காலச்சக்கரங்கள் எமது சந்ததியினருக்குக் கொடுத்துச்சென்றோம் என்ற பெருமையும் உங்களை வந்தடையும். எனவே உங்கள் அனைவரையும் வருடத்திற்கு ஒரு நாளோ ஒரு கிழமையோ எமது சங்கம் வரை உழைக்க வேண்டி நிற்கின்றோம். தமிழில் மட்டுமல்ல ஆங்கிலமோ அல்லது எந்த மொழியோ உங்கள் ஆக்கங்களை நிகழ்ச்சிகளை சிறுவரோ இளைஞரோ, முதியரோ, பெண்களோ, ஆண்களோ தந்து எமக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்க அன்புடன் வேண்டுகிறோம். மீண்டும் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி 2009ம் ஆண்டு தொடர்ந்து வருவது. ஆகவே நாம் தன்னம்பிக்கை விடாமுயற்சி உற்சாகம் மனவுறுதியுடன் செயல்பட்டால் உங்கள் வாழ்க்கை சிறப்படையும். சாதிக்க நினைத்தால் மனவுறுதியிருந்தால் வெற்றி நிச்சயம். எமது நோக்கின் பாதியைக் கடப்பது உங்கள் ஆதரவை வேண்டுகிறேன். எமது மண்ணின் மைந்தர்கள் எல்லாவழிகளிலும் உயர்ந்தவர்கள் ஆனால் சந்தர்ப்பங்களும் வசதிகளும் அவர்களை முன்னேற விடாமல் தடுக்கின்றது. இன்று நாமெல்லோரும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் சிறப்பாகவும் செல்வந்தர்களாகவும் வாழ்கின்றோம். இதே போன்று எமது ஊர் மக்களும் சிறப்பாக முன்னேற உதவி செய்வதே எமது கடமை. நாம் வாங்கிய காணியில் ஒரு கட்டிடம் கட்டி அதில் கணணி அறை, தையல் அறை, தல மண்டபம், தியான அறை என்பவற்றுடன் கூடிய வகுப்பறைகளைக் கட்டிக் கொடுக்க

வேண்டும் என்பதே எனது விருப்பம். ஒரு கை தட்டி எழும்பாது எல்லோரும் ஒன்று சேர்ந்தால் எல்லாமே இன்பமாக முடியும்.

ஒரு மாணவி படிக்கப்பணமில்லாததால் தனது உயிரையே அர்ப்பணித்துக் கொண்டார். A/L மாணவியின் இத்துணிவற்ற செயல் வெட்கப்படக்கூடியது. ஆனாலும் அதிபர் கூறியதுடன் நான் சிலரிடம் கூறி உதவி கேட்ட போது மனமுவந்து மாதம் 10 வருடத்திற்கு £120 படி தந்து உதவிய வெ. சபாநாதன், இ. பத்தமசிறி, பானுவதி சின்னத்தம்பி (ஆசிரியை) இ.ஞானதுஸ்யந்தன் அவர்கட்கும் ஒரு மாணவியை முழுவதாகப் பொறுப்பு எடுத்து அம் மாணவிக்கு நேராகவே மாதம் 6000 ரூபாவை அனுப்பும் சிவதர்சினி விக்கினேஸ்வரம் அவர்கட்கும் நானும் அக்குடும்பங்களும் நன்றி கூறுகின்றோம். இம்முறை நாம் சிக்கனமாகவும் சிறப்பாகவும் நடாத்தி முடிக்க இருக்கின்றோம்.



# பொருளாளரிடமிருந்து..



"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நன்றே வாழிலும் நனி சிறந்ததே"
என்றார் பாரதி.புலம் பெயர்ந்து நாம் இலண்டனில் வாழ்ந்தாலும் எமது தேசம், எமது ஊர் எமது பாடசாலை, எமக்கு கற்பித்த ஆசான்கள் இவை என்றுமே மறக்கப்பட முடியாதவை. அந்த வகையில் பிறந்தோம் மடிந்தோம் என்று இல்லாமல் நாம் வாழுகின்ற போது என்ன செய்தோம் எதைச் சாதித்தோம் என்று எங்களை நாங்களே கேட்டுக்கொளள வேண்டும்.
"அன்னசத்திரம் ஆயிரம் அமைப்பதை விட ஒருவனுக்கு
கல்வியறிவு கொடுப்பதே தானத்தில் சிறந்தது" என்கின்றனர்

அந்த வகையில் எமது விக்னேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரித்தானியக் கிளையினராகிய நாங்கள் ஆண்டுதோறும் "விக்னேஸ்வரம்" என்ற நிகழ்வினை நடாத்தி அதன்மூலம் எங்களாலான உதவிகளைச் செய்துவருகின்றோம். இந்த வருடம் நடக்கும் "விக்னேஸ்வரம்" செழிப்புடன் வீறு நடைபோட்டு வெற்றிகரமாக நடக்கவேண்டும் எமது சங்கத்தின் பொருளாளராகிய நான் உங்களது ஒத்துழைப்புகளை உரிமையுடன் கேட்டுக்கொண்டு இந்த விழா இனிது நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டிநிற்கின்றேன்.

அன்புடன்

திரு. இராசலிங்கம் பத்மசிறி
பொருளாளர்

# என்மன வானில் !!!



இது ஒரு இனிமையான சினிமாப் பாடலின் வரி. இதைப் போலவே இனிமையாகவும், எளிமையாகவும் என் மன வானிலே சிறகடிப்பது நாட்டார் பாடல்கள். இந்தப் பாடல்களின் உண்மைத்தன்மையும் எளிய நடையும் எந்தப் பாமரனுக்கும் புரியத்தக்க வார்த்தைகளும் என்னை மிகவும் கவர்ந்து விட்டது. எனவே நான் பெற்ற இன்பத்தை நீங்களும் பெற வேண்டாமா? அதனால் தான் இத்தகைய சிறப்பம்சங்கள் கொண்ட நாட்டார் பாடல்களின் மீது ஒரு பார்வையாக விரிகிறது இக்கட்டுரை.

**"ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது. அதில் ஆணும் பெண்ணும் சேர்ந்திருந்தால் சலிப்பிருக்காது"**

என்ற பாடல் எல்லோரது மனதிலும் வாயிலும் முறுமுறுக்கும் பாடல் ஆகும் அதாவது வியர்வை சிந்தி உழைக்கின்ற அந்தத் தொழிலாளி தங்களது களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக மனதில் எழுகின்ற உணர்வுகளை எந்தவித ஒளிவு மறைவுமின்றி இசையோடு பாடுவார்கள் இவையே நாட்டார் இலக்கியமாக, நாட்டார் பாடல்களாக உருவாக்கம் பெறுகிறது. பெரும்பாலும் இவை செவிவழியாகவே வந்ததாகக் கூறுகிறார்கள். இவை எப்போது தோற்றம் பெற்றது என்று இன்னும் யாராலும் கூறமுடியவில்லை. பின்னாளில் தோற்றம் பெற்ற மெய்யிசைப் பாடல்கள், தமிழிசைப்பாடல்கள், சினிமாப் பாடல்கள் அனைத்திற்கும் இவையே மூல காரணம் என்று சொல்வோரும் உண்டு.

பேராசிரியர் கார்த்திகேசுத்தம்பி அவர்கள் "இலக்கியம் என்பது மனித உணர்வுகளைச் சித்தரித்துக் காட்டுகின்ற லைக் கண்ணாடி" என்று ஒரு வரைவிலக்கணம் கொடுக்கின்றார் எனவே அவரது கூற்றின்படி நின்று பார்க்கும் போது நாட்டார் பாடல் ஒரு முழு இலக்கிய வடிவம் என்பது கண் கூடு.

எல்லா இலக்கியப் பாடல்களைப் போலவே இவையும் கடவுள் வாழ்த்து, வீரம், சோகம், காதல், நகைச்சுவை என்று மனிதனது அனைத்து உணர்வுகளையும் தொட்டு நிற்கின்றது. தமிழர் பண்பாட்டு இலக்கியமாகவும் மிளிர்கின்றது. எந்தக் காலத்திற்கும் ஏற்ற வகையில் மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கிறது மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்கின்றது. அதாவது மருத்துவிச்சி பாடலில் தொடங்கி ஒப்பாரியில் முடிகின்றது. அந்த வகையில் நான் அறிந்த சில பாடல்களையும் அவை சொன்ன கருத்துக்களையும் இன்று எங்கள் புலம் பெயர் வாழ்வில் ஏற்படுகின்ற முரண்பாடுகளையும் பார்ப்போமா?

நாட்டார் பாடல்களில் எப்போதுமே ஒரு பொதுவுடைமைத்தன்மை காணப்படும். தத்துவமேதைகளால் மார்க்ஸ் அவர்களுக்கு முதலே இந்தப் பாமரத் தமிழன் பொதுவுடமைக் கருத்தை விதைத்திருக்கின்றேன் என்றே எண்ணத் தோன்றுகிறது. அவன் பொது நோக்கோடு தான் வாழ்ந்திருக்கின்றான் என்பது வெள்ளிடை மலையாகத் தெரிகின்றது. உதாரணமாக மருத்துவிச்சி பாடலைப் பாருங்கள்.

**"அயலும் புடையும் வாழ வேண்டும், அன்னமும் சுற்றமும்**
**வாழவேண்டும்ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்"..... என்ற பாடலைப்**

பார்த்தால் முதலில் தன் அயலவரையும் சுற்றத்தவரையும் வாழ வேண்டும் என்று வாழ்த்தி விட்டு பின்னர் தான் தனது குடும்பத்துக்கு வருகின்றான். ஆக முதலில் மற்றவர்களது நலனைப் பற்றிச் சிந்தித்து விட்டுத்தான் தன்னலம் பற்றிப் பேசுகின்றாள் எங்களில் எத்தனைபேர், நான் உட்பட இத்தகைய சிந்தனையோடு வாழ்கின்றோம். எம்மை நாமே கேட்டுப் பார்க்க வேண்டிய கேள்விகள் பல.

**"பட்டி பெருக வேணும் தம்பிரானே**
**பாற்பானை பொங்க வேணும் தம்பிரானே**
**மேழி பெருக வேணும் தம்பிரானே – எல்லோரும் வாழ வேண்டும்**
**தம்பிரானே".**

இப்படியாக எங்கு என்ன ஒரு பாடலை எடுத்தாலும் அதில் தன்னலத்தைவிட பொதுநலமே மேலோங்கிக் காணப்படும். இந்த உயரிய பண்பு அறிவு வளர்ச்சியின் பின்னாளில் அற்றுப் போய்விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அறிவு வளர்ச்சியின் பின் போட்டி, பொறாமை, கழுத்தறுப்பு என்பனவே ஆதிக்கம் செலுத்துகின்றது. இனிப் புலம்பெயர் மண்ணிலும் சரி, தாய் மண்ணிலும் சரி எத்தனை பேர் தாலாட்டுப்பாடி பிள்ளைகளைத் துாங்க வைக்கிறார்கள் இல்லை எத்தனை பேருக்குத் தாலாட்டுப் பாடல் தெரியும் என்றால். கேள்விக்குறியாகவே உள்ளது. ஆனால் அன்று என்ன அழகாகத் தாலாட்டுப்பாடினார்கள்.

**"ஆராரோ..... ஆரிவரோ**
**பாட்டி அடித்தாளோ பாலூட்டும் கையாலே**
**அத்தை அடித்தாளோ அமுதூட்டும் கையாலே........**
**முத்தாப்பன் செட்டியவள் எங்க பிள்ளைக்கு**
**முடிதரிப்பின் ஆசாரி.............**
**கட்டிப் பசும் பொன்னே எங்க பிள்ளை**
**குவித்த நவரத்தினமோ...**
**தொட்டிலுமோ பொன்னாலே எங்க பிள்ளைக்கு**
**தொடு கயிலே முத்தாலே........... என்று சிறுவயதிலேயே**

உறவு முறைகளைச் சொல்லி வளர்க்கின்றாள். தன்னுடைய செல்வங்களிலே மேலான செல்வமாக தனது பிள்ளைகளை எண்ணி மகிழ்கின்றாள்.

கிடைத்தற்கரிய செல்வமான முத்து பவளம் என்பன எல்லாம் என் பிள்ளைக்கு ஈடாகுமோ என்று கேட்கின்றாள். அவள் தனக்குக் கிடைத்ததை வைத்துக் கொண்டு சந்தோஷமான வாழ்வு வாழ்ந்திருக்கின்றாள் என்பது புலப்படுகின்றது. நிலையற்ற செல்வத்தை விட நிலையான உறவு முறைக்கே முன்னுரிமை கொடுத்திருக்கின்றாள். இன்றைய நவ யுகத்திலே பணம் பணம் என்று பித்துப் பிடித்து அலைபவர்களுக்கு அவள் ஒரு எடுத்துக் காட்டாக வாழ்ந்திருக்கின்றாள் என்று சொல்லலாம்.

தாலாட்டுப்பாடலிலே நாசூக்காக சில விடயங்களையும் சொல்லிவிடுவார்கள். பின்வரும் பாடல் மனைவியானவள் தன் கணவரிடத்திலே தன்னுடைய உளக்கிடக்கையைச் சொல்வது போலவும் அமைகிறது.

"ஆரும் அடிக்கவில்லை அஞ்சுவிரல் நீண்டவில்லை தம்பி துணை வேண்டுமென்று தானா அழுகிறானா"

என்ன அழகாகத் தன் கணவரிடம் தன்னுடைய உளக்கிடக்கையைச் சொல்வது போலவும் அமைகிறது.

"ஆரும் அடிக்கவில்லை அஞ்சுவிரல் நீண்டவில்லை
தம்பி துணை வேண்டுமென்று தானா அழுகிறானே"

தன் கணவனிடம் தன்னுடைய ஆசையைச் சொல்லிவிடுகிறாள் எந்த ஆபாசமும் இல்லை, எந்த இரட்டை அர்த்தமும் இல்லை இது தான் நாட்டார் பாடல்களுக்குரிய தனிச்சிறப்பு, இப்படியே மகிழ்வாகப் போகின்ற போது காதலை நாகரிகமாக எப்படிச் சொல்கிறது என்று பார்த்தால். அங்கே தாய் தந்தையின் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்கின்ற தன்மை காணப்படுகின்றது. அது பயத்தின் காரணமாக இருக்கலாம். அல்லது தனது குடும்பமானத்தைக் காப்பதற்காகவும் கூட இருக்கலாம். காதலன் காதலியை வெளியே வரும்படி கேட்கிறான் அவள் சொல்கிறாள்.

**"....... வாப்பா அறிஞ்சாரெண்டால் வாளெடுத்துவீசிடுவார்....."**
**என்றும் பின்னர் அவன் ஆசை வார்த்தை கூறிப்பார்க்கும்முன்பு.**

**"ஒத்தை ரூபாய் தாரேன் என் சாவிக் கொத்தும் தாறேன் பத்தரை**
**மணிக்கு மேலே நீ வெத்திலைக் காட்டுக்கு வாடி"**

அதற்கு அவள் கூறுகின்றாள் ஒத்த ரூபாவும் வேண்டாம் உன் சாவிக் கொத்தும் வேண்டாம் பரிசம் போடுமாமா........." என்று அந்தப் பாடல் வருகிறது நீ என்ன தான் சொன்னாலும் என்னை நிச்சயித்தப்பிறகு தான் உன்னோடு வெளியே வருவேன் என்று உறுதியாகக் கூறிவிடுகிறாள் இன்றைய தரம் கெட்ட சினிமாப் பாடல்கள் போலல்லாது என்ன நாகரிகமான முறையிலே

சொல்லி இருக்கிறார்கள். அவன் மீது காதல் கொண்ட போதும் அவன் வரம்பு மீறவில்லை. பண்பாட்டைக் கெடுக்கவில்லை என் அறிவுக்கெட்டிய வரை எந்தக் காதற்பாட்டுக்கும் கொச்சையாக அமைத்து காணவில்லை.

இனி சிரித்தால் அதாவது மனம்விட்டுச் சிரித்தால் நோய்களே ஓடி விடும் என்கிறார்கள் எனவே அந்தச் சிரிப்பைத் தரக்கூடிய நகைச்சுவை எப்படி இருக்கிறது என்று பார்த்தோமானால் அந்த மக்கள் வேலைக்களைப்பு, அலுப்பு என்பவற்றில் நினைத்தாலும், கடின உழைப்பாளிகளாக இருந்தாலும் நகைச்சுவை உணர்வு இயல்பானதாக இயற்கையானதாகக் காணப்படுகிறது.

**ஒருவர் ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னடி செய்தாய் மாந்தர்**
**அம்மியடியிலே கும்மியடிச்சேன் சும்மா வா இருந்தேன்.**

ஒருவர் : ஏன் குட்டி என்னடிகுட்டி, என்னடி செய்தாய்.
மற்றவர் : அம்மியடியிலே கும்மியடிச்சேன் சும்மாவா இருந்தேன்.

ஒருவர் : ஏண்டி குட்டி, என்னடிகுட்டி என்னடி செய்தாய்
மற்றவர் : அம்மியடியிலே கும்மியடிச்சேன் சும்மாவா இருந்தேன்.

ஒருவர் : பாம்புக்குட்டிக்குப் பல்லு விளக்கினாள் சும்மாவா இருந்தாள்.

ஒருவர் : ஏண்டி குட்டி, என்னடி குட்டி என்னடி செய்தாய்
ஒருவர் : ஆட்டுக்குட்டிக்கு கூத்துப் பழக்கினாள் சும்மாவா இருந்தாள்.

இப்படியாகப் பல பாடல்கள் அமையும். இங்கு இவர்களது நகைச்சுவை என்பது எல்லோரையும் சிரிக்க வைக்கின்றது. யாரையும் புண்படுத்துவதாக அமையவில்லை. இவர்களது வாழ்வியலோடு ஒத்து நிற்கின்றது. கற்பனையில் களம் அமைக்கவில்லை, இன்றைய சில சினிமா நகைச்சுவைகள் போல இரட்டை அர்த்த வசனங்கள் இல்லை. சிறுவர் முதல் பெரியவர்களை பாடிக் கேட்டு இரசிக்க கூடியதாக இருக்கும். அன்றாட வாழ்வோடு ஒத்துப் போகின்ற தன்மை காணக்கிடக்கிறது.

வாழ்வின் கடைசிக்கட்டம், மருத்துவிச்சியோடு ஆரம்பமாகி ஒப்பாரியில் வந்து நிற்கிறது. மனித வாழ்வும் பிறப்புக்கும் இறப்புக்குமிடையில் எத்தனை அரங்கேற்றங்கள், எத்தனை பித்தலாட்டங்கள், கபடத்தளங்கள் இப்படி எத்தனை ஆனால் நாட்டார் பாடலில் பாடப்படுகின்ற ஒப்பாரியில் தன்னைச் சார்ந்தவர்களோ அவரது உறவினர்களோ செய்த நல்லவைகள் அவர்களது

நற்பண்புகளோ எடுத்துப் பாடப்படும். குறை இருந்தாலும் நிறை காணும் பண்பே அங்கே காணப்படுகிறது.

**"கையும் கணக்கெழுதும் உங்களது கறுத்த விழிப்பார்த்தெழுதும் .......... கட்டிலிலே நாங்கள் பொய்யுறக்கம் என்றிருந்தோம். நல்ல மனை பார்த்து வையும் நான் வருவேன் சீக்கிரமா... மூ... ஓ..."**

இப்படியாக உணர்வுகளை, குமுறல்களைக் கொட்டிப் பாடுவதாகவே அமைகின்றது. கேட்பவர்களையும் ஒரு முறை கண் கலங்க அல்லது நிலை குலைய வைத்து விடுகின்ற தன்மை இந்த ஒப்பாரிக்கு உண்டு. ஆக மனிதனது பிறப்போடு தொடங்கி அவனது மரணப்படுக்கை வரை தொடர்கிறது. மனித வாழ்வோடு ஒன்றாகக் கலந்திருக்கிறது.

இறுதியாக எக்காலத்திலும் தமிழ்ப்பண்பாட்டைக் காப்பாற்றக்கூடியதாகவும், வரம்பு மீறிப்போகாத இலக்கியமாகவும் பொக்கிஷங்களை காலத்தால் அழிய விடாது காப்பாற்ற வேண்டியது எங்களது பொறுப்பாகின்றது. எமது இனம் சந்ததியினருக்கும் அறியத்தரவேண்டும்.

இன்றைய நவயுகத்தில் மனிதன் போட்டி பொறாமை ஆணவம் கர்வம் என்று அலாது பட்டுத்திரிகின்றான். இவருக்கு எங்களது முன்னேற்ற வாழ்க்கை முறை தெரியப்பட வேண்டும் இன்று தமிழன் மாறிவிட்டான், மரத்தில் இருந்து இறக்குவதற்கு இத்தகைய எளிய நடையிலும் பேச்சுவழக்கிலும் உள்ள பாடங்களை அவனைக் கேட்க கேட்க வைக்க வேண்டும் எனவே தான் இவை இசைத் தட்டுக்களாகவும், எழுத்துருவிலும் கொண்டு வரப்பட வேண்டும். இந்த முயற்சியில் பலர் ஈடுபடுவதாகவும் அறிய வருகிறது.

இறுதியாக இந்த நாட்டார் இலக்கியப் பாடல்களை எனக்குப் பண்ணோடு பாடிக் காட்டி அதில் ஈடுபடவைத்தவரும் தாய்ப்பாலோடு தமிழையும் ஊட்டி வளர்த்து எங்கோ ஒரு மூலையில் இருந்து என்னையும் மனைவி பிள்ளைகளையும் ஆசிர்வதித்துக் கொண்டிருக்கக்கூடிய என் அன்னை திருமதி ஆச்சி சின்னத் தம்பி அவர்களை (ஆச்சிரீச்சர்) பெருமிதத்தோடு நினைவு கூர்ந்து நாட்டார் பாடல் பற்றிய எனது பார்வையை முடிக்கிறேன்.

**நன்றி**

**வாழ்க தமிழ் - வளர்க தமிழர்**

**சின்னத்தம்பி கர்ணன்**

# எமது பாடசாலை

வஞ்ச மில்லா உள் நோக்குடன்
வதன மதி முக மலர்ந்து
கல்வி அறிவு வேண்டும் - என
மாணவரை வர வழைக்கும் யா/விக்கினேஸ்வரா

விக்கினேஸ்வரன் எனும் திருநாமமுடைய
பட்டம் உலகு எங்கும் பறக்க
காற்றாய் வந்தது யா/விக்னேஸ்வராக் கல்லூரி

வாய்மையாய் ஒருவன் சிறக்கவும்
கண்ணியமாய் வையத்துள் வாழவும்
வல்லமையால் மாணவர்கள் உயரவும்
வாழ்த்திடும் விக்கினேஸ்வராக்கல்லூரி

கரவெட்டி எனும் ஊரினிலே
கல்லாய் தோன்றி மலையாய் உயர்ந்திடும்
பெரியோரின் வழிகாட்டலில் சிற்பியின்
கரங்களாய் வடித்த சிலை எமது பாடசாலை

வானவில்லைப்போன்ற நான்கு இல்லங்கள்
உடம்பில் ஓடும் இரத்தம்போல சிற்றம்பலமும்
இலையின் பச்சை போல சின்னத்தம்பியும்
வானிலே இருக்கும் நீலநிறமும் சூரியனும் போல மீதி இரண்டு இல்லமும்

கடலைவிட மேலான மனமுடைய அதிபரும்
சங்கில் மறைந்திருக்கும் முத்துப்போன்ற - ஆசான்கள்
முத்தை கவா தேடி வந்த திருடர்களாக மாணவர்கள்
அறிவை ஊட்டி வாழவழியமைக்கும் கல்லூரி

பாடசாலையை தாங்கும் தண்டு போல அதிபர்
ஆலமரத்தின் வேர்போன்ற ஆசான்கள்
ஆசான் விழும் விழுதினிலே ஆடும் மாணவர்கள்
பாச அரவணைப்பு தரும் எமது கல்லூரி

**அ. அர்த்திக்கா**

# விக்கினேஸ்வரா

மூன்று நான்கு தலைமுறைகள் முன்னோக்கிப் பார்கின்றேன்
முன்று கால் மனிதன் நான் இப்போது
முத்தான பருவம் வாழ்வின் முதலான பருவம்
அதுதான் என் கல்விச் சாலைப் பருவம்

அமைதியான சூழலிலே அமைந்த பள்ளியது
அறிவு வளம் பல பொருந்திய எமது பள்ளி
பண்புடனே செயற்படும் எமது அதிபர்
அன்புடனே ஆசீர்வதிக்கும் எங்கள் ஆசான்கள்

சீரும் சிறப்பும் பல பெற்ற பள்ளியது
சிறுவர்கள் வளம் பெற அமைந்த பள்ளி
புனிதமும் அமைதியும் தன்னகத்தே கொண்டு
புரியாத புதிராக மண்ணில் அமைந்துள்ளது

விளையாட்டுப் போட்டிகளும் வித்துவச் சிறப்புகளும்
அறிவியற் போட்டியுடன் அழகான நிகழ்வுகளும்
சுற்றுலாவும் சுழலும் பட்டிமன்றங்களும் நிகழ
பரிசளிப்பு விழாவும் பண்ணிசைகளும் நிகழும்பள்ளி

ஆரவார ஆர்ப்பாட்ட ஒன்று கூடலென
மகிழ்வித்து சிறப்பித்து வளரும் பாடசாலை
முந்த நாள் முடிந்ததென நினைத்தேன்பள்ளியை ஆனால்
மூன்று நாலு தலைமுறைகள் நிலையாய் நிற்கும்

சகல வளங்களும் சரிவரப் பெற்ற பள்ளி
சமுதாயம் உயர்வடைய குடிகொண்டபள்ளி
தோல்விகள் வெற்றியின் படிகள் என
வெற்றிவாகை சூடி நிற்கின்ற எமதுபள்ளி இது

**ஆக்கம்**
**இ. வாகீசன் - 13B**

# 2000ம் களின் பின் விக்னேஸ்வரா..

தனது நூற்றாண்டுகளில் காலடி எடுத்து வைக்க உள்ள விக்னேஸ்வரா எனும் எமது அன்னைத்தாய் 2000ம்களின் பின் அடைந்துள்ள பௌதிக, ஆசிரியவள, மாணவர்வள, பொதுப்பரீட்சை பெறுபேறுகள் பற்றி உங்கள் மனக்கண்முன் கொண்டுவருவதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

## பௌதிகவள விருத்தி

1. RAAN நிதிமூலம் 110'x25' மூன்றுமாடி கட்டிடம் பௌதிககூடம், உயிரியல்கூடம், இரசாயனகூடம் கொண்டதாக அமைத்து முடிக்கப்பட்டு 2002இல் திறந்து வைக்கப்பட்டது.

2. கல்லூரி மாணவரின் கணனி அறிவை வளர்த்தெடுக்கும் முகமாக கல்லூரிக்கு 2003ல் கணனி கற்றல் நிலையம் 40'x20' வகுப்பறை கொண்டு அமைக்கப்பட்டது.

3. மாணவரின் தேடல் திறனை வளர்த்தெடுக்குமுகமாக அமரரும் முன்நாள் பாராளுமன்ற உறுப்பினரும், பழைய மாணவரும் ஆகிய திரு.மு.சிவசிதம்பரம் அவர்களின் பன்முகப்படுத்திய நிதி மூலம் 6 0 'x2 5 ' நூலகம் 2003ல் ஏற்படுத்தப்பட்டது.

4. காலத்துக்கு பொருத்தமான கல்வியினை வழங்குமுகமாக கட்புல செவிப்புல சாதன அறை 2003ல் ஏற்படுத்தப்பட்டது.

5. கல்லூரிக்காக நீர்வழங்கலை மேம்படுத்துமுகமாக முன்நாள் அரசஅதிபர் திரு.பத்மநாதன் அவர்கள் வழங்கிய 178000/= கொண்டு நீர்தாங்கி 2005ல் பாடசாலையினுள் அமைக்கப்பட்டது.

6. கல்லூரியில் கடினபந்து துடுப்பாட்டத்தை தோற்றுவித்து அதற்கான ஆடுகளம் ஒன்று 2005ல் ஏற்படுத்தப்பட்டது.

7. Necord நிறுவன உதவி கொண்டு 110'x 25' இருமாடி கட்டிடத்தொகுதி 2006ல் அமைக்கப்பட்டு "Pon Ganeshan block" என நாமம் சூட்டப்பட்டது.

8. கல்லூரியில் இருந்த பூர்த்தி அடையாத நிலையில் இருந்த நூலகம் Necord உதவியுடன் பூர்த்தி செய்யப்பட்டு ரூபா100000 பெறுமதியான நூல்கள் சேர்க்கப்பட்டது.

9. கல்லூரியில் இருந்த சிவபாதசுந்தரம் மண்டபம் மாகாணகல்வித் திணைக்களத்தினால் பாடசாலை வேலைப்பகுதிக்காக வழங்கிய ரூபா300000 கொண்டு 2006ல் திருத்தியமைக்கப்பட்டது.

10. 2007ல் கல்லூரிக்கென திரு.டொமினிக், திரு.T.செல்வரஞ்சன், திருமதி.சி.சின்னம்மா ஆசிரியர் அவர்களால் அன்பளிப்பாக 12பரப்பு வழங்கப்பட்டது.

11. கல்லூரி கணனிக் கற்கை நிலையத்திற்காக 23 கணனிகள், தளபாடங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

12. கல்லூரிக்கென அன்பளிப்பாக பெறப்பட்ட காணியினுள் இருந்த பனைகள் விற்கப்பட்டு ரூபா120000 பெறப்பட்டு பழைய மாணவர்சங்க நிதிக்கு சேர்க்கப்பட்டது.

13. முன்நாள் கல்விச்செயலர் வடக்குகிழக்கு திரு.S.தியாகலிங்கம் அவர்களின் உதவி கொண்டு 110'x25' இருமாடிக் கட்டிடத்தொகுதி ஒருபகுதி அமைக்கப்பட்டது.

14. மேற்குப்புறமாக இருந்த 90'x 25' இருமாடிக் கட்டிடத்தினுள் ஆரம்பப்பிரிவு நூலகம் SCF உதவி கொண்டு அமைக்கப்பட்டு அக்கட்டிடம் "Supramaniam block" என நாமம் சூட்டப்பட்டது.

15. 2005ல் கல்லூரிக்கு அன்பளிப்பாக பெறப்பட்ட 12பரப்பு காணியை சுற்றிவர SCF நிறுவன உதவி கொண்டு 500அடி நீள சுற்றுமதில் கட்டப்பட்டது.

16. முடிவடையாத நிலையில் இருந்த 110'x 25' கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு 6 – 11 மாணவர்களின் பயன்பாட்டிற்கென பொதுவிஞ்ஞானகூடம், கணனிஅறை கொண்டதாக மாற்றி அமைக்கப்பட்டு 2009ல் பூர்த்தி செய்யப்பட்டது.

17. 2009ல் லண்டன் பழைய மாணவர்சங்கத்தின் உதவி பெற்று கல்லூரியின் தெற்குப்புறமாக இருந்த 8பரப்பு காணி விக்னேஸ்வர ஆரம்பப்பிரிவு பாடசாலைக்கென கொள்வனவு செய்யப்பட்டு அதனை சுற்றி தூண் கம்பிவேலி, கேற் என்பன போடப்பட்டது செப்பம் செய்யப்பட்டது.

18. 2006 முதல் உள்ளக ஒலிபெருக்கித் தொகுதி ஏற்படுத்தப்பட்டு காலை உடற்பயிற்சி, தேவாரம், மாலை பாடசாலைக்கீதம் செய்ய ஒலிபெருக்கியில் ஒலிபரப்பப்படல். கொழும்பு பழைய மாணவர்சங்கம் உள்ளக ஒலிபெருக்கித் தொகுதியினை தந்து உதவியது.

19. கல்லூரிக்கு இணையத்தள வலையமைப்பு ஏற்படுத்தப்பட்டு கல்லூரிக்கென இணையத்தளம் ஒன்று 2009ல் ஏற்படுத்தப்பட்டது. கல்லூரி இணையத்தள முகவரி www.jvigneswara.sch.lk

20. கல்லூரியை மையமாக கொண்டு evillage வலைப்பின்னல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு "evillage.karaveddy" எனும் இணையத்தளமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

web address www.evillage.lk/karaveddy

# My thoughts on Jaffna

The small plane we travelled touched down on the runway. A pockmarked tarmac runway, with crimson sand around it and lush green bushes surrounding it. The only building was one small shelter. Armed soldiers patrolled everywhere. I stepped out into the sweltering heat and felt like I was in another era. The year was 2003, the place – Jaffna Airport.

We drove onto our home village of Navindil, past paddy fields and coconut trees, past shelled out buildings and groups of soldiers. We slept on straw mats on the floor, and during the night there was a rainstorm and blackout. During the day we had to avoid deadly snakes and poisonous insects. Since I was 11 at the time I was extremely disappointed to find that the family home didn't have a TV or computer.

But then I found that I could wander around the village on my own, exploring the area, talking to the neighbours, seeing all the animals and wildlife. During those two weeks, my cousin and I explored every inch of Navindil and loved it. We saw the work being done on the paddy fields and vegetable patches, we saw the temple, and we saw the fresh fish at the market, tasted the delicious food, caught butterflies and on one careless excursion shone torches down snake holes.

However, our occasion for being there was a sombre one, my grandfather Mr A Subramanian had passed away days earlier. We pulled up at the family home to witness a funeral. I looked out at dozens of mourners sitting and standing around the house, while my grandfather lay at peace.

Only then did I fully realised the legacy he left, I saw hundreds of people coming through, an entire school group was sent round to observe and give their respect to the old schoolmaster. I felt proud that my grandfather received such respect at his passing away, and saddened that I did not fully see the respect he could achieve among people when alive.

I'm pleased hear that the Old student's association of Vigneswara College in UK is doing sterling work to help the education of its current students, through the awards of bursaries , scholarships, and the acquiring of new lands for the school developments. I feel that the Old Students diaspora is making a healthy contribution and investment for the future of Karaveddy and its people.

***Sancheevan Karunanithy***

# குருவிற்கு சமர்ப்பணம்

திட்டங்கள் பல வகுத்து
திறம்பட அவை முடித்து
எண்ணற்ற விருதுகளை எமக்களித்த
எமதருமை ஆசான்களே
சமர்ப்பிக்கின்றேன் இதனை உங்களுக்காக......

நாட்கள் நகர்ந்து...
வருடங்கள் கடந்தாலும்.....
இந்தக் கல்லூரித்தாயிடம்
நாம் பெற்ற கல்வியினை
கண்போல காத்துக்கொண்டோம்.

விக்னேஸ்வரா பெற்றுத்தந்த
மானசீகமான ஆசான்களே....
உங்கள் நல்மனங்களில்
உவகை பொங்கட்டும்
ஒவ்வொரு நாளும், நிழலைப்போல்
தொடரும் நம் கல்விப்பயணம்
அழியாத கல்வியைப் பெற்றோம்.

பரீட்சை வந்தால் எங்கள் மனதில் புயலடிக்கும்
ஆனாலும் உங்கள் கல்வி வழி நடத்தும்
குரு மனமோ நந்தவனம்
ரோஜாவும் இருக்கும்
முள்ளும் இருக்கும்
கல்விக்கு முட்கள் கூட பாதை வகுக்கும்
பெறுபேறுகள் வந்த பிறகு
விண்ணைத்தொடும் எங்கள் மனது
வானுக்கும் எல்லையுண்டு, கல்விக்கில்லை.
கல்வி பயிலும் காலம் வரையில்
துள்ளித் திரியும் எங்கள் விழிகளில்
கண்ணீரைக் கண்டதில்லை
நீங்கள் சாட்சி........

கல்லூரியில் கழித்த காலமெல்லாம்
சுகமான கனவுகளே
இனிமேலும் வந்திடுமோ

பாடசாலை வாழ்க்கை....
ஆரம்பம் முதல் இறுதிவரை
வழிநடத்தும் ஆசான்கள்
எங்குமே இருந்ததில்லை
தெய்வம் சாட்சி
இச் சந்தர்ப்பத்தில்..
நாங்களெல்லாம்...
மனம் மகிழ்ந்து நிற்கின்றோம்...
அன்புள்ளம் கொண்ட
உங்களை வாழ்த்தத்தானே...
இறுதிவரை எம்நெஞ்சில்
அழியாத ஓவியமாய் திகழ்வது
எங்கள் அன்பு ஆசான்கள் தானே..

இங்கிருக்கும் கல்விமான்கள்....
எங்கிருந்தோ வந்த ஞானிகள்...
கல்லூரி மண்தான் உங்கள் வேடந்தாங்கல்..

நாங்கள் செல்லும் வழிகளிலே
உங்கள் அறிவுகூட வருமே
அதனாலே எங்களுக்கு அச்சமில்லை...
ஜீவனுள்ள நாள் வரையில்
உங்கள் நினைவு, எங்கள் விழிகளில்
கண்ணீரில் தான் - எங்கள்
Farewell Party.....

விக்னேஸ்வரா தந்த கல்விமான்களே..
நீங்கள் கடல் கடந்து சென்றிடினும்
உங்கள் கவின் பணியை நாம் மறவோம்
கனி கூர்ந்தே நல்குகின்றோம்
கனிவான வாழ்த்துக்களை...

செல்லுமிடமெங்கும் ஜெயம் பல பெற்று
சகல சௌபாக்கியங்களோடும்
நலமுடன் வாழ வாழ்த்தும்
நல்லிதயங்களின் நலமான
வாழ்த்துக்கள்.....

நன்றி

***பழைய மாணவரில் ஒருவன்***

விக்கினேஸ்வரா கல்லூரியின் மிகப்பழைய மாணவன் என்ற முறையில் என்னை ஏதாவது எழுத வேண்டும் என பழைய மாணவர் சங்கக் குழு வேண்டிக் கொண்டதன் பெயரில் ஒரு சில வார்த்தைகள் எழுத முனைகிறேன்.

இது காலவரை 50ம், 60ம் ஆண்டுகளில் விக்கினேஸ்வராவில் படித்தவர்களின் பங்கீடு குறைவாகவே இருந்தது. மாற்றி அமைக்கும் முகமாகவே என்னை ஏதாவது எழுதும்படி செயல்குழு வேண்டிக் கொண்டது. தன் 1953ம் ஆண்டு முதல் 1962ம் ஆண்டு வரை விக்கினேஸ்வராவில் கல்வி பயின்றேன்.

இந்தக் காலகட்டத்தில் தான் விக்கினேஸ்வரா பல சாதனைகளை புரிந்து. சின்னத்தம்பி ஆசிரியரின் வழி நடத்தலிலும் ராமஜெயத்தின் தலைமையிலும் ஆன கைப்பந்தாட்டக் குழு இலங்கையிலேயே முதலாவது இடத்தைப் பிடித்தது.

அதே கால கட்டத்தில் யாழ் ஆசிரியர் சங்க உதைபந்தாட்ட போட்டிகளில் இரண்டாவது இடத்தையும் பெற்றது. இதில் என் பங்கும் உண்டு.

அடுத்ததாக வடமராட்சி ஆசிரியர் சங்க விளையாட்டு போட்டிகளில் பல தங்கப் பதக்கங்களை வென்றது. அத்துடன் யாழ் ஆசிரியர் சங்க விளையாட்டுப் போட்டிகளிலும் தங்கப் பதக்கங்களை பெற்றது. இதில் கணபதிப்பிள்ளை என்பவரின் ஒரு மைல் ஓட்டத்தில் சாதன படைத்தார் அத்துடன் பூபாலபிள்ளை, வைரமுத்து ஆகியோரும் சாதனை படைத்தார்.

அக்கால கட்டத்திலேயே தலைமை ஆசிரியராக இருந்த திரு. K. சிவப்பிரகாசம் அவர்களின் திறமையால் S.S.C அரசாங்கப் பரீட்சையிலும் சாதனை படைத்தது சிறந்த மாணவர்களை வடிகட்டி எடுத்து முதலாவது இடத்தைப் பிடிப்பது சில கல்லூரிகளின் விளக்கம் ஆனால் திறமை குறைந்த மாணவர்களை வைத்து சாதனைப்படைப்பது விக்கினேஸ்வரா கல்லூரியின் சிறப்பு அம்சமாகும். அத்துடன் ஆசிரியர்களின் திறமையும் அதிபரின் திறமையும் ஆகும்.

இதுவரை தற்பெருமை பேசினேன், ஒரு சில நகைச்சுவையும் தேவை அல்லவா, இதில் என்னத்தைச் சொல்ல என்னத்தைவிட.

கந்தையா ஆசிரியரின் அடிக்குப் பயந்து கல்லூரிக்கே போக மாட்டேன் என்றான் ஒரு மாணவன் கந்தையா என்ன ........................................ ஒருவர் ஒரு பிள்ளையாரே. பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கு பயிற்சிக்காக 3 மணிக்கே பாடசாலை முடித்துவிடும். அடுத்த நாள் அதிபரிடம் அடிவாங்கியவர். எப்படித்தான் அதிபர் கண்டுபிடித்தாரோ என்னைப்பற்றியும் கொஞ்சம் சொல்வேன் நீங்கள் கோபித்தாலும் பரவாயில்லை.

1974ம் ஆண்டு லண்டன் வந்து படித்து முன்னேறியவர். இதற்கு எனது காலம் சென்ற அண்ணா நவரத்தினராசாவும், மாமா சுப்பிரமணியமும் (மாஸ்டர்) உறுதுணையாக இருந்தார்.

எனது முன்னேற்றத்திற்கு வித்திட்ட சில ஆசிரியர்களின் பெயர்களை குறிப்பிடாமல் இருக்க முடியாது.

சனி, ஞாயிறு என்றும் பார்க்காமல் எங்கள் பாடசாலைக்கு அனுப்பி படிப்பித்த மாஸ்டர்.

திரு. சிவப்பிரகாசம் (தலைமை ஆசிரியர்)
திரு. தருமலிங்கம்
திரு. அருணாசலம்
திரு. சிதம்பரநாதர்
உதவி தலைமை ஆசிரியராக இருந்து இளைப்பாறிய எனது மாமா திரு. ஆ. சுப்பிரமணியம்.
ஆங்கிலம் கற்றுத்தந்த எனது அக்கா திருமதி. பாய்க்கியம் (பாக்கியச் ரீச்சர்)

இதற்கு மேலும் உங்களை சலிப்படையச் செய்ய விரும்பவில்லை

வணக்கம்

**க. சிவானந்தராசா**

# நியாயங்கள் சாவதில்லை!!

சின்னத்துரைக்கு அதிர்ச்சியாக இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன் தன்னுடன் நன்றாகப் பேசிக் கொண்டிருந்த அண்ணாமலை இன்று இல்லை. சின்னத்துரையின் நண்பர் தான் அண்ணாமலை. சின்னத்துரைக்கு தனியார் நிறுவனமொன்றில் உத்தியோகம் அவருக்கு ஒரே மகன். பல்கலைக்கழக பட்டதாரியான அவன் மேல் படிப்பை தொடர்ந்தான். அண்ணாமலை தீப்பெட்டித் தொழிற்சாலையொன்றைச் சொந்தமாக நடத்தி வருகின்றார். சொந்தமாகவே காரென்றும் பங்களா என்றும் வசதியாகவே இருக்கும் அவருக்கு ஆண், பெண்ணென்று இரண்டு பிள்ளைகள் மூத்தவள் சந்தியா இரண்டாவது மகன் பெயர் சந்தோஷ் க.பொ.த. உயர்தரம் படித்துக் கொண்டிருக்கிறான் சந்தியா அழகும் அறிவும் நிரம்பியவர். தன் தந்தைக்கு உதவியாக இருந்து தொழிலைக் கவனித்து வருகிறாள்.

சின்னத்துரையும் அண்ணாமலையும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்புதான் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதாவது சின்னத்துரை தன் மகன் சூரியாவை அண்ணாமலையின் மகள் சந்தியாவுக்கு மணம் முடித்துக்கொடுக்கும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டதுடன். அதற்கு அச்சாரமாக ஐந்து லட்சத்தை சின்னத்துரைக்கு அண்ணாமலை கொடுத்திருந்தார்.

சின்னத்துரை, அண்ணாமலையின் முகத்தை இறுதி முறை பார்ப்பதற்காக அவரின் பங்களாவிற்குச் சென்றார். அங்கே அதிக கூட்டம் இருந்தது சந்தியா இடிந்து யோயிருந்தாள். கோர்ட், சூட் போட்டிருந்த சிலர் கூடியிருந்து ஒருவருக்கொருவர் ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள் சின்னத்துரை சந்தியாவை நெருங்கினார். அவள் கண்களால் கண்ணீர் வடிய அவளைத் தனியாக அழைத்துச் சென்றார். 'அப்ப நல்லாத்தான் இருந்தாரு திடீர்னு மாரடைப்பு வந்திடுச்சி. இந்தத் தொழில் மேலுள்ள நம்பிக்கையினால் பெரிய தொகைக் கடனைத் தனியார் வங்கியொன்றில் வாங்கியிருந்தார். ஆனால் சில நிர்வாகச் சீர்கேடு மற்றும் வியாபாரத்தில் ஏற்பட்ட திடீர் விற்பனைச் சரிவுகளால் அடுத்தடுத்த கடன் நிலுவை, மேலதிகக் கடன் பற்று வரவு எதையுமே சரியா கட்ட முடியவில்லை. வங்கி நிர்வாகம் அந்த பங்களா, தொழிற்சாலைக் கட்டிடம், கார் எல்லாத்தையும் கடனுக்காக கையகப்படுத்துறதுக்கான சட்டநடவடிக்கை எடுத்தாங்க அப்பாவால இதைத் தாங்க முடியல.லட்சாதிபதியாயிருந்த நாங்க இப்போ பிச்சாதிபதியாயிட்டோம்... என்ன செய்யிறதுன்னே தெரியலை..."

சின்னதுரை இதை எதிர்பார்கவில்லை. அண்ணாமலையின் மகளைத் தன் மகனுக்கு மணம் முடித்துக் கொடுப்பதன் மூலமாக அவற்றின் சொத்துக்கள் தன்கைக்கு வருமென்று நினைத்திருந்தார். ஆனால் கடைசியில் விஷயம் இப்படிச் சொத்தையாகிப்போகுமென்று அவர் ஏதிர்பார்க்கவேயில்லை. அவரிடம் சின்னத்துரை வாங்கிய ஐந்து லட்சத்தைப் பற்றிய விடயம் நிச்சயமாக அவர்கள் இருவரைத் தவிர வேரு யாருக்குமே தெரியாது. வந்த வரைக்கும் இலாபமென்று இத்தோடு கழன்று கொள்ள வேண்டியது தான். அண்ணாமலையின் ஈமக் கிரியைகள் நடப்பதற்கு முன்னமே அவர் வெளியேறிவிட்டர். இனி அந்தப்பக்கமே தலை வைத்துப் படுக்க மாட்டார். மகனுக்கு வேறொரு பெரிய இடமாகப் பார்ப்பதென்று முடிவு செய்தார்.

நாட்கள் ஓடின, மூன்று மாதங்கள் சென்றன. சின்னதுரை அண்ணாமலையைப் பற்றி முற்றாக மறந்து போயிருந்தார். மகனுக்கு மும்முரமாக பெண் பார்த்துக் கொண்டிருந்தார்.

கடந்த சில வாரங்களாக சூரியாவிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. வார நாட்களில் விடுமுறைக்காக வீட்டுக்கு வருபவனைத் தொடர்ந்து காண முடியவில்லை. மேலும் ஒரு வாரம் ஓடியது. அன்றொரு சனிக்கிழமை சின்னத்துரை பகல் உணவுக்குப் பின் சாய்வு நாற்காலியில் அமர்ந்தவாறு கோழித் தூக்கம் போட்டுக் கொண்டிருந்தார். அப்போது வாசலில் கார் ஒன்று நிற்கவே, அவர் சட்டென கண் விழித்தார். வெளியே மாலையும், கழுத்துமாக அவர் மகன் சூரியாநின்றிருந்தான். பக்கத்தில் மணப் பெண் கோலத்தில் தலை குனிந்தவாறு சந்தியா நின்றிருந்தாள். சின்னத்துரை அதிர்ச்சியுடன் அவர்களைப் பார்த்தார். தயங்கி நின்ற சந்தியாவின் கைகளைப் பற்றியவாறு உள்ளே நுழைந்த மகனை உக்கிரமாகப் பார்த்தார் சின்னதுரை.

“ஏய் நில்லு..... யாரைக்கேட்டு அவளை மணம் முடிச்சாய்? உனக்கு என்ன தைரியம்...? சின்னத்துரையின் மனைவி வள்ளியம்மை சத்தம் கேட்டு சமையலறையை விட்டு வெளியே வந்தவள். மகன் மாலையும் கழுத்துமாக வந்து நிற்பதைப் பார்த்துத் திகைத்தாள்.

“என்னடா நான் பேசிக்கிட்டிருக்கேன்...... நீ பேசாம வீட்டுக்குள் வாரே.....”

இப்போ உங்களுக்கு என்ன வேணும்....?

என் அனுமதியில்லாம இவளை எப்படி நீ மணம் முடிக்கலாம். அப்பன்னு என்று நான் குத்துக்கல்லாட்டம் இருக்கிறப்போ நீ அதைப்பத்தியெல்லாம் கண்டுக்காம கண்டவளையெல்லாம் தைரியமாக கட்டிக்கிட்டு மாலையும் கழுத்துமா வந்திருக்கியே...... திமிர் தானே.....?

நான் கண்டவளை கட்டிக்கலை சந்தியாவைத் தான் கட்டினேன்.

நீங்கள் என்னைக் கேட்டா சந்தியாவை திருமணம் செய்வதற்கு பேசி வைத்தீங்கள். அப்பாகிட்ட 5லட்சம் பணம் வாங்கினீர்கள். நீங்கள் செய்கிறது நியாயமாப்பா? என்னை வைத்து கல்யாண பிஸ்னஸ் பண்ண நினைச்சீங்க, ஆனா கடைசியில் என்ன நடந்துச்சு பார்த்தீங்களா...? அங்கு அண்ணாமலை செத்ததுமே உண்மைகளும் செத்துடும்னு நினைச்சீங்க... ஆனா உண்மைகள் நியாயங்கள் எப்பவுமே சாகாது...”

வள்ளியம்மை கோபத்துடன் தன் கணவனை நோக்கியவள் மலர்ச்சியுடன் ஓடிச்சென்று சந்தியாவின் கரங்களைப் பற்றினாள்.

“மகாலட்சுமி மாதிரி இருக்குதே. நீ பயப்படாம வாம்மா... அவர் கிடக்காரு... பணத்தை விட குணமுள்ள குலம் விளங்கிற மருமகள் தான் எனக்கு வேணும்...”

சூரியா சந்தோசத்துடன் சந்தியாவைப் பார்க்க, அவள் மகிழ்ச்சியுடன் வள்ளியம்மை கால்களில் விழுந்தாள். சின்னத்துரை எதுவுமே பேசாமல் சிறுத்துப் போன முகத்துடன் மறுபடியும் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.

முற்றும்...

கு. சுஜந்தன்.

J/ VIGNESWARA COLLEGE
OLD STUDENTS' ASSOCIATION

## VIGNESWARA – ORIGIN AND THEREAFTER

Vigneswara is on the threshold of scoring an unbeaten century. I refer to the completion of a centenary of uninterrupted service by 2017. The result and benefit to the students particularly in Karaveddy is inestimable. The anxious expectation of such a landmark event coupled with general power cut imposed on a powerless public occasioned thoughts and reminiscences of Vigneswara. I thank the Vigneswara OSA of London for the conferment of an opportunity to translate my thoughts into words.

During the colonial days, English was the medium of instruction and the language of administration. IPSO FACTO, knowledge of English became a passport to employment and even social status. In short English education was a sine-qua-Non for advancement in life. So there was a historical need for a institution for the teaching of English.

The Christian missionaries, blessed with resource and means, welcomed the opportunity with open arms. The result was a proliferation of Schools run by missionaries particularly during the last quarter of the 19th Century and early part of the 20th century. Of course, the accent was on English Education.

This process provoked understandable reaction from the Hindus. They viewed the situation with anxiety and concern. Almost contemporaneously, there was a Hindu resurgence. The late Arumuganavlar led the movement for the revival of interest in the theory and practice of Hinduism. It is history that the movement gathered momentum encompassing almost every aspect of the life of Hindus.

A part of this process was the realization of the necessity of School; for Hindus to study in a Hindu atmosphere, Hindu activities and philanthropists pooled their resources and devoted their energies for the starting of Hindu schools for both vernacular and English education. Hindu schools sprang up in the entire Jaffna district.

Karaveddy did react. Fortunately perhaps, there was Hindu philamthropist by the name of Mr. Veeravagu Sittampalam popularly known as Siththamaniam who had the will and the means to perform the task – a historical opportunity. He started a few Vernacular Schools. He also conceived the idea of an English School for the Hindu students of Karaveddy. The baby of that conception is the Vigneswara of today.

Like any other School, Vigneswara had its humble beginnings. In fact it started with a few huts. With the passage of time, as needs increased, there has been a progressive supply of physical and other resources. With the succession of eminent principals and competent staff, Vigneswara gradually made its mark in terms of performance. Its fame spread far and wide and by the late forties, students from without Karaveddy had come in numbers to pursue their education.

Vigneswara produce its share of personnel to man various professions. The old students had adorned with distinction various position in the public and private sector.

Comparatively speaking, one of the most memorable achievements was the initiation of senior students in to the principles and practice of democratic parliamentary governance. A parliament essentially in the line of our own national parliament was formed with the senior students as the constituents.

A speaker prime minister and leader of the opposition were duly and democratically elected. Business was conducted in terms of the National parliament with policies presented and debated. There was heated and humors exchanges, of course under the watchful eye of the speaker. This served not only as a forum for understanding and practicing the basics of parliamentary system but also was a plat form to develop the rhetorical and wonder Vigneswara produce d not less than three parliamentarians viz M. F. P. Kandiah, M. Sivasithamparam and K. Jeyakkody who made their mark in the National scene in their own unique way.

The Sri Lankan government has introduced an "Isuru scheme" whereby one school is selected in each Divisional Secretariat Division and provided resources so as to ensure quality education to the students. It is expected that that this will prevent the exodus of students from rural areas to urban areas. In addition to the spread of well the varied problems faced by students who have to travel many miles away from their permanent residence in search of

quality schools. Five schools have thus far been selected in the Jaffna District. Vigneswara is one beneficiary.

A high powered team of education is headed by a director visited Vigneswara on the 20th of September, 2009. The college was formally inducted in to the Isuru scheme. This was followed by a workshop for the empowerment of the staff. Later a team of engineers inspected the site for the purpose of construction of building including an administrative complex. Both teams evinced transparency, flexibility  and a readiness for open dialogue. The fruitful interaction among the teams, principal, staff, old students association and physical resources as well as other educational needs.

It is opportune that old students and well wishers spread over the globe rally round Vigneswara. It is recorded with appreciation that associations of old students based in Karaveddy, Canada, London and Colombo have been acting in union and pooled their resources for the betterment of Vigneswara. Let us act with greater vigor sense of purpose for the greater glory of our Alma matter.

I take this opportunity to send greetings to all old students spread all over the world.

By the time we celebrate our centenary in 2017, Vigneswara may well have risen to the status of a National School, May Vigneswara grow from strengths to strengths.

**Truth Triumphs**



## சிறுகதை

# நீங்காத நிழலின் நினைவு

விக்னேஸ்வரா வீதியால் போய்க் கொண்டிருந்த போது கல்லூரியைப் பார்த்தால் அதன் கட்டடங்கள் தான் கண்ணில் நிழலாய்ப் படிந்திருக்கும் ஆனால் ஒருநாள் தென்பட்டது வீதியெல்லாம் வாகனங்கள், ஆங்காங்கே மக்கள் வீதியோரம், மைதானம் முழுவதும் ஒரே சனக்கூட்டம் வீதியில் நின்ற ஒருவரை விசாரித்த போது அவர் சொன்னது "வன்னியிலிருந்து வந்து அகதி முகாம்களில் தங்கியிருந்த மக்களை இங்கு கொண்டுவந்து விட்டுக்கிடக்குது." என்றார். அந்த சனக்கூட்டத்துக்கு தங்குவதற்கு இடங்கொடுத்தது விக்னேஸ்வரா கல்லூரிதான்.

மக்களின் முகங்களில் மைதானமெங்கும் ஒரே சோகநிலை தென்பட்டது. அக்கூட்டத்திலிருந்து ஒருதலை எட்டிப் பார்த்தது. அதுதான் எப்பவோ பார்த்து கதைத்து பேசிய தலை. கொஞ்ச காலத்துக்கு காணாதமுகம். அந்த முகத்திலே சோகம். காய்ந்து கறுத்த முகம். செம்பட்டைத்தலை மெலிந்த உடல். அந்த முகத்தை பார்த்ததுதான் எனக்கு அழுகை வந்துவிட்டது. அந்த முகம் விக்னேஸ்வராவின் பழைய மாணவி ஒருவரின் முகம் தான் என்பது தெளிவாகத் தெரிந்தது. அந்த முகம் விக்னேஸ்வராவின் சூழலையும், கல்லூரியையும் இரசித்துக் கொண்டே இருந்தது.

எட்டிப் பார்த்த அந்தமுகம் யாரென்று யோசித்துப் பார்த்தால் பின்னர்தான் பெயர் ஞாபகம் வந்தது. அதுதான் எங்கட வீட்டுக்குப்பக்கத்திலிருந்த பொன்னம்மா அக்கா என நினைவு வந்தது. மைதானத்துக்கு வெளியிலிருக்கும் எவரும் உட்செல்ல அனுமதியில்லை. ஆங்காங்கே பாதுகாப்பு படையினர் காவல். எட்டிப்பார்த்த பொன்னம்மாக்காவைப் பார்ப்பதற்கும் அவருடன் கதைப்பதற்கும் முயற்சி செய்துகொண்டிருந்தேன். அப்போது அவர் முந்தி என்னோட பழகியதுதான் அலைமோதிக்கொண்டிருந்தது.

அங்கு இருக்கும் மக்களை ஒவ்வொருவராக பெயர் கூப்பிட்டு விட்டுக்கொண்டிருக்கிறார்கள் பாதுகாப்புப் படையினர். எனக்கே பொன்னம்மாக்காவுடன் அப்ப கதைக்கப் போறன் என்ற எண்ணம். அவ்வாறுநான் அங்கு நின்றபோது அப்பா என்னைத்தேடி வந்துவிட்டார். எனக்கு மனதுக்குள் பயம் அப்பா என்னைத்தேடி வந்துவிட்டார். எனக்கு

மனதுக்குள் பயம் அப்பா என்னைப் பேசிறாரோ எனத்தெரியாது பயத்தோட இருந்தன. ஆனால் அப்பா பேசேல்ல. வீட்டுக்கு அறிவித்துவிட்டு அப்பாவும் என்னுடன் விக்னேஸ்வராவில் நின்றார்.......

அப்பா பொன்னம்மாக்கா வந்த செய்தியை வீட்டுக்கு அறிவித்த பின்புதான் பொன்னம்மாக்காவினுடைய சகோதரி குஞ்சரத்துக்குத் தெரியும். குஞ்சரம்மாக்கா பின்புதான் வந்து எங்களோட நிண்டு பொன்னம்மாக்காவைப் பார்த்து அழுதபடி நின்றார். எனக்கும் இவளவு நேரமும் நிண்டு காலும் நோகுது விடியப்பாப்பம் என்ற ஒரு ஆதங்கம் ஆனால் மனங்கேட்கவில்லை. கொஞ்ச நேரம் பாரத்துக் கொண்டு நின்றேன் என்னால் பொறுக்க முடியவில்லை. குஞ்சரம்மாக்காவும் எங்களைப் போகச் சொல்லிச் சொன்னார். நானும் அப்பாவும் வீட்டுக்கு வந்திட்டம்.

வீட்ட வந்ததுதான் எங்கட வீட்ட ஆரோ வன்னியால் வந்திட்டினம் எண்டு நினைச்சு அயலவர்கள் வந்தார்கள். அப்பத்தான் அவைக்கும் தெரியும் பொன்னம்மாக்கா விக்னேஸ்வராவில் வந்திருக்கும் செய்தி நாளைக்கு விடியப்போய் பொன்னம்மாக்காவை வீட்டில் பார்ப்பம் என்று நினைத்தப்படி தூக்கத்துக்கு சென்றேன்.

நேரமோ பதினொன்டரை நித்திரை தூங்க ஆயத்தம் ஆனால் எனக்கு கிடக்க நித்திரை வரவில்லை பொன்னம்மக்காவினதும் அவருடைய மகளினதும் பழைய நினைவுகள் அலைமோதிக் கொண்டிருந்தது அப்படியே நினைத்தவாறு நித்திரையாகிவிட்டேன். நேரமோ மூண்டு மணி இருக்கும் விடிந்து விட்டது. அம்மா என்னை எழுப்பினார், நித்திரை தூக்கமாக தான் இருந்தது.

அப்போது : அம்மா சொன்னார் பொன்னம்மாக்கா வந்துட்டா போல குஞ்சரம்மாக்கா வீட்டில ஆட்டோ கோன் அடிச்சு கேக்குது எனக்கு அதை கேட்டது தான் உடனே எழுந்து விட்டேன் அம்மாவும் நானும் குஞ்சரம்மாக்காவினுடைய வீட்டை நோக்கி :

குஞ்சரம்மாக்காவை கண்டது தான் அதில் நிண்ட எல்லோருக்கும் அழுகை வந்துவிட்டது. பொன்னம்மாக்காவின் கவலை துன்பம் முழுவதும் குஞ்சரம்மாக்காவின் வெளிப்பாடாக இருந்தது. பொன்னம்மாக்காவை பார்த்ததும் எல்லோரது முகத்திலும் ஒரு சோகம் நானும் அப்பாவும் கூட்ட நிண்டது அவாவுக்கு தெரியும் அவா எனக்கு நன்றி சொன்னார்.

“பொன்னம்மாக்கா உங்கட மகள் எங்க” என்று கேட்டேன் அதற்கு பதில் கூற முன் அவர் அழுது விட்டார். : “பிள்ளைக்கு அவங்கட செல்பட்டு இறந்து போனாள்” என அழுதபடி சொன்னா. அவாவுக்கு பிள்ளையினதும், கணவரினதும் கவலை தான், யோசனை, “எண்ட பிள்ளகள கணவன் இல்லாமல் நான் இருந்து வாழ்வதில் பயனில்லை” என்று சொன்னார். “அக்கா வாழ்க்கையில இழப்பு, துன்பம், கவலை, குலைவு வருவது இயற்கை” உதுக்கு கவலை படாதேங்கோ என்று நான் சொன்னேன்.

அங்கு வந்து இருப்பவர்களும் “காலத்திற்கு நடக்கிறத நாங்கள் என்ன என்று தடுக்கிறது? குஞ்சரம்மாக்காவின் பிள்ளைகள் இருக்கிறாளல் தானே” என பொன்னம்மாக்காவுக்கு ஆறுதல் கூறினார்கள். “அக்கா கவலையை விட்டு இனிமேலும் எண்டாலும் நிம்மதியா இருங்கோ” என நான் கூறினான். பொன்னம்மாக்காவுக்கு எப்படி சொன்னாலும் கவலை மாறாது போல் இருந்தது என்றாலும் ஓரளவுக்கு முன்னைய நிலைக்கு திரும்பல் ஏற்பட்டது. நாட்கள் பல உருண்டோடின ஆனால் பொன்னம்மாக்காவின் கவலை ஓரளவுக்கு குறைந்தாலும் முகத்தில் ஒரே சோகம்....

சில வேலைகளில் விக்னேஸ்வரா கல்லூரியின் நீங்காத நினைவலைகள் அவருடைய வாயில் இருந்து வெளிவரும். தான் படிக்கும் போது இருந்ததை விட எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டது என்றெல்லாம் சொல்வார். கல்லூரியில் அவர் படிக்கும் போது நிகழந்த நிகழ்வுகள் பற்றிய வரலாறெல்லாம் தெரியப்படுத்துவார்.

தன்னுடைய மகள் இருந்து இருந்தால் விக்னேஸ்வரா விலே படித்திருப்பாள் என்று கூறி தான் பட்ட துன்பத்தையும் சொல்லுவா.... பொன்னம்மாக்காவின் நினைவுகளின் வெளிப்பாடு கண்களிலிருந்து உருண்டோடும் கண்ணீர்த் துளிகள்... கண்ணீர்த் துளிகள்தான் நீங்காத நினைவுகளை வெளிகாட்டும் குறிப்போட்டிகள்............

# *வருமானச் செலவு க/கு 2009*

**வருமானம் (2009)**

| | | |
|---|---|---|
| நுழைவுச்சீட்டு விற்பனை | | 1465 |
| புத்தக விற்பனை | | 205 |
| விளம்பரம் | | 700 |
| | | 2370 |
| ஆயுட்கால அங்கத்தவர்கள் | | |
| திரு. சுப்பிரமணியம் நந்தகுமார் | 100 | |
| திருமதி. தமயந்தி கருணநிதி | 100 | |
| திருமதி. சகுந்தலை | 100 | 300 |
| *வருமானம் 2010* | 300 | |
| | | 2670 |

<u>செலவு</u>

| | |
|---|---|
| உணவு | 363 |
| ஒலி ஒளி | 180 |
| ஒளிப்பதிவு | 50 |
| பொன்னாடை | 250 |
| புத்தகம் அச்சடித்தல் | 800 |
| சில்லறைச் செலவு | 100 |
| | 1743 |
| செலவை மிஞ்சிய வருமானம் | 927 |
| | 2670 |

சில்லறைச் செலவு க/கு

| | |
|---|---|
| முன்வருட மீதி | 36.37 |
| காசு | 100.00 |

| | |
|---|---|
| <u>செலவு</u> தொலைபேசி | 65.00 |
| அஞ்சல் செலவு | 108.30 |
| | 173.30 |
| மீதி செலவு | **37.30** |

| | |
|---|---|
| காணி வாங்க கொடுத்த பணம் | 4850 |
| இதுபற்றிய தொலைபேசி செலவு | 55 |
| | 4905 |

# எமது எண்ணம்

எண்ணத்தின் சக்தியால் இந்த உலகம் முழுவதையும் அசைக்க முடியும் : எமது எண்ணங்களின் ஆற்றல் மிக்கதுடன் பரவுந்தன்மையும் கொண்டது. எவ்வாறு வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசிகள், விண்வெளி மூலம் பரவுகின்றதோ அதே போன்று எமது எண்ணங்களும் ஆகாயவெளி மூலம் மற்றவர்களைச் சென்றடைகின்றது. இன்றும் பண்டைய கால முனிவர்கள் ஞானிகளின் எண்ணங்கள் ஆகாயவெளி மூலம் மற்றவர்களைச் சென்றடைகின்றது. இன்றும் பண்டைய கால முனிவர்கள் ஞானிகளின் எண்ணங்கள் ஆகாயவெளியில் பதிவு செய்யப்பட்டுள்ளன எனக் கூறுகின்றனர். ஆற்றல் மிக்கவர்கள் இவ்வெண்ணங்களைப் பார்க்கவும் படிக்கவும் முடியும். நாம் அழிந்தாலும் நமது எண்ணங்கள் அழிவதில்லை, எண்ணங்கள் வலிமையுடையதாக இருந்தால் அவை விரைவில் பயனளிக்கும்.

எமது உணர்வின் மூலமே எண்ணங்கள் உருவாகின்றன. உணர்வு தூயதாக இருந்தால் உனது எண்ணமும் தூயதாகும், தூய எண்ணங்கள் உள்ள ஒருவர் தான் மக்களைக் கவர முடியும்.உ.ம் விவேகானந்தர்.அவர் கூறினார் ஆர்வமுள்ள 100 இளைஞர்களை என்ன்டம் ஒப்படையுங்கள் உலகத்தையே மாற்றிக்காட்டுகிறேன். இளமையிலிருந்துதான் தூய எண்ணங்களை உருவாக்கமுடியும். எண்ணங்களை வளர்ப்பது ஒரு சிலர் அதனை ஆர்வமுடனும் கவனமாகவும் வளர்க்க வேண்டும். எண்ணங்கள் ஒளியின் வேகத்தையிட அதிகமானது. இதனால் உயர்ந்த தெய்வீகமான எண்ணங்களால் அருகிலும் தூரத்திலும் உள்ளவர்கள் பயனடைகிறார்கள். அன்பு எண்ணங்களால், நோய்களையே போக்க முடியும். நல்ல எண்ணங்கள் நல்ல உடலைக் கொடுக்கும், பல விந்தைகளைச் செய்யும். மனித மனம் ஒரு குரங்கு போன்றது. இடையிடையே தீய எண்ணங்கள் எட்டிப்பார்க்கும், எட்டிப்பார்க்கும் போது விரட்டி விட்டு நல்ல எண்ணங்களை பிடித்துக் கொள்ள வேண்டும். பயனற்ற எண்ணங்களை துரத்திவிட்டு உன்னதமான உயர்ந்த எண்ணங்களை உருவாக்க வேண்டும், தோட்டத்தில் எவ்வாறு களைகளை நீக்கி நல்ல பூ, காய்களை உருவாக்குகிறோமோ அதே போன்று எமது மனத்திலுள்ள தீய எண்ணங்களை களைய வேண்டும். மனத்தின் ஒவ்வொரு செயலும் எண்ணமும் உயிரனுக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. மனத்தில் குழப்பம் சோர்வு எதிர்மறை எண்ணங்கள் உணர்வுகள் இருந்தால் அவை மின்சாரம் போன்று நரம்பு வழியாக உயிரனுக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. மனத்தில் குழப்பம் சோர்வு எதிர்மறை எண்ணங்கள் உணர்வுகள் இருந்தால் அவை மின்சாரம் போன்று நரம்பு வழியாக உயிரனுக்களுக்கு அனுப்பப்படும். இதனால் உயிர் அணுக்கள் பலவீனமடைந்து தமது வேலையைச் செய்ய முடியாமல் சக்தியை இழக்கின்றன. இவ்வாறு தொடர்ந்து நடைபெற்று

நோயினால் பாதிக்கப்படுகின்றோம். சோர்வோ மனக்குழப்பமோ ஏற்படும்போது அதற்கு இடமே கொடுக்காது மனதை நல்ல வழியில் திருப்பி இன்பமான எண்ணங்களை உருவாக்கி எண்ணங்கள் வழிப்படுத்த வேண்டும்.
இதனால் தான் "இடுக்கண் வருங்கால் நகுக" என்றார் வள்ளுவர். எப்போதும் சிரித்துக்கொண்டிருப்பவர்கட்கு நோயில்லை என்றும் இளமையாகவே இருக்கின்றனர். நாம் மட்டும் சிரிக்காமல் மற்றவர்களையும் சிரிக்க வைப்பதனால் பலவீனமுடைய எண்ணங்களை கட்டுப்படுத்தலாம். எண்ணம்தான் உனது வாய் வழியாக பேச்சாகவோ சிரிப்பாகவோ கோபமாகவோ அழுகையாகவோ வெளி வருகின்றது. அன்புடன் ஒருவரைப்பார்த்து சிரித்தால் அவன் அக்கணமாவது இன்பமடைகின்றான், எனவே அன்புடன் பேசி, சிரிக்க பழகிக் கொள்ள வேண்டும். ஆக்கவும், அழிக்கவும் வல்ல எண்ணங்களைக் சீராக்கி உயர்ந்த நோக்கில் திசை திருப்ப வேண்டும். தீய எண்ணங்களை வளர்த்ததுக் கொண்டால் என்றும் நிம்மதியிலே இதனையே வள்ளுவர் "நன்வெஞ்சு அறிவது பொய்யற்க, பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச்சுடும்" என்றார்.

தன்னலமற்ற அன்பு, இரக்கத்தோடு கூடிய ஒவ்வொரு எண்ணமும் ஒருவர் எல்லா உயிர்களிடத்திலும் நட்புறவோடு நடந்து கொள்வதற்கு உதவும். எண்ணத்தைச் சரியான முறையில் சிந்திப்பதால் சிறந்த விதியை உருவாக்கலாம். "முகம் ஒரு சிறந்த கண்ணாடி." அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" ஒவ்வொரு எண்ணங்களும் முகத்தில் பிரதிபலிக்கின்றது. உன் முகத்திலுள்ள வடுவைக் கொண்டு, உன் மன நிலையையும் உன் நோயையும் அறியலாம். ஒவ்வொரு எண்ணமும் முகத்தில் அடையாளத்தை உண்டு பண்ணுகிறது. தெய்வீக எண்ணத்தால் முகத்தில் ஒளி உண்டாகும். தீய எண்ணத்தால் முகம் இருண்டுவிடும். ஒவ்வொருவருடைய எண்ணங்களையும் படம் பிடித்துக் காட்டிவிடும். மகிழ்ச்சி தைரியம் உள்ள உண்மை எதையும் நேர்கொண்டு பார்க்கும் கோபம், சதி, பொறாமையுள்ள உள்ளம் நேரில் பார்ப்பதற்கு அஞ்சும். ஒரே எண்ணம் உள்ளவர்கள் ஒன்று சேருவார்கள் வேறுபட்ட எண்ணமுள்ளவர்கள் ஒன்று சேருவது கடினமானது. உள்ளத்தை எப்பவும் இளமையாக வைத்திரு அப்போது என்றும் 16 வயது தான். என்றும் நான் இளமை அழகு வலிமை, அறிவு, அன்பு எல்லாம் நிரம்பியுள்ளவன் என்று எண்ணிக் கொண்டிருந்தால் எல்லாம் இலகுவில் கிடைக்கும் என்றால் முடியாது. படிக்கவில்லை, அழகு இல்லை இப்படி இல்லைகளைச் சேர்த்துக் கொண்டால் நாம் இல்லாதவர்களாகிவிடுவோம். நீ தூய்மையானவன் என்று எண்ணிக் கொள் தூய்மையானவனாகவே மாறி விடுவாய், எல்லோரையும் நல்லவராகப்பார், நல்லதைச் செய் தொண்டு செய் அன்பு காட்டு, தர்மம் செய், மற்றவர்களைச் மகிழச் செய், சேவை செய்வதில் விருப்பம் கொள் அப்போது உனக்குச் சாதகமான சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் சூழ்நிலையும் உண்டாகும். மற்றவர்களுக்கு துன்பம் செய்தால், வம்பு

பேசினால், கோள் சொன்னால், ஏமாற்றினால், மற்றவர் சொத்துக்களை அபகரித்தால் உனக்கு என்றும் துன்பம் தான் கிடைக்கும். உனது மனமே உன்னைத் தண்டிக்கும் ஒவ்வொருவரும் தம் எண்ணங்களைக் கவனித்து தன்னைப் பற்றிப் பார்ப்பதால் தன் எண்ணங்களை உயர்வு உன்னதாக்கிக் கொள்வதுடன் உயர்பண்புகளை உடையவனாகிறான. மற்றவர்களைப் புண்படுத்தாமல் இனிய சொற்களை சிறிதளவே பேசுகிறான். பொறுமை, இரக்கம், அன்பு இவற்றை வளர்த்துக் கொள்வதனால் மக்களிடம் அவனைப்பற்றி உயர்வான எண்ணங்கள் ஏற்படுகின்றது. தீய பண்பை நல்ல எண்ணங்களால், நல்ல பண்பாக மாற்றி விடலாம். அதே போன்று எமக்கு எதிரான சூழ்நிலைகளையும் எமது நற்செயல்களால் எமக்கு எதிரான சூழ்நிலைகளையும் எமது நற்செயல்களினால் எமக்குப் சாதகமானதாக மாற்றலாம். எண்ணங்களில் சுதந்திரத்தோடு இரு, எச்சரிக்கையுடனிரு. உன்மனத்திலிருந்து வெளியேறும் ஒவ்வொரு எண்ணமும் உன்னிடமே திரும்பிவரும், உன்னைத்திருப்பித்தாக்கும் ஆயுதம். நாம் மற்றவர்களிடம் வெறுப்பு காட்டினால், நீயும் வெறுக்கப்பவாய். நீ அன்ர் காடடினால் மற்றவர்கள் உங்களிடம் அன்பு காட்டுவார்கள், இன்பமும், மகிழ்ச்சியும் நிறைந்த எண்ணமுடையவர்களால் தான் சமுதாயத்திற்கு உதவுவதுடன் மகிழ்ச்சியையும் உண்டாக்கினார்கள்.

எண்ணம் மூளையிலிருந்து வெளிப்பட்டு வெளியில் சுற்றித்திரிகிறது. நல்லதோ, கெட்டதோ, மனதை விட்டு வெளியேறும் போது மணல் அல்லது மனவெளியில் அலைவுகளை ஏற்படுத்துகின்றது. அவ்வலைகள் எல்லா திசைகளிலும் வெகுதூரம் வரை பரவுகின்றது. அவை மற்றவர்களின் மூளைக்குள்ளும் நுழைகின்றன. இமய மலைக்குகைக்குள் வாழும் ஆற்றல் மிகுந்த ஞானியின் எண்ணங்கள் அமெரிக்காவில் இருக்கும் ஒருவருக்கு அனுப்ப முடியும். ஞானியின் தூய எண்ணங்கள் வெளிப்படுவதையும் அவை தேவையானவர்களிடம் சேர்வதையும் எவராலும் தடுக்க முடியாது. உண்மையான துறவி ஒருவர் எண்ணங்களாலேயே எதையும் செய்து முடிக்கலாம். ஊதாரணமாக ஒரு வைத்தியர் நோயாளியைப் பார்த்து உனக்கு பெரிதாக ஒன்றுமில்லை சிறு இருமல் தான் இந்த மருந்துடன் மாறும் என்றால் அவர் பெரிய வருத்தமிருந்தாலும் அவருடைய எண்ணத்தினால் நோயில்லாமல் போகின்றது. அதே வைத்தியர் உனக்கு பெரிய நோயுள்ளது இரத்தம் சோதிக்க வேண்டும் (x – ray) படம் எடுக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பினால் அவர் விரைவிலேயே நோய்க்குள்ளாகி விடுவார். அதே போன்று ஒருவரை நேரில் சந்திக்கும் போது நீ அழகாக இருக்கிறாய் நன்றாக இருக்கிறாய் என்று சொன்னால் அவர் சந்தோஷப்படுவதுடன் மனத்தில் அந்த எண்ணங்கள் பதிவதால் நன்றாகவே இருப்பார். அதை விடுத்து, நீ மெலிந்திருக்கிறாய் கறுத்திருக்கிறாய் முகத்தில் கவலை அப்பியுள்ளது" என்று கூறினாள் அவர் அந்த தாக்கத்தினாலேயே நோய்க்குள்ளாகின்றார். நல்ல வார்த்தைகள்,

நல்ல ஆலோசணைகள் சொல்ல முடியாவிட்டால் எமது வாயை மூடிக் கொள்வது நன்று.

வாய் பேசாமலே உறுதியான உள்ளத்தால் இயக்கப்பட்டு ஒரு முகப்படுத்தப்பட்ட எண்ணங்களால் மனத்தொடர்பை உருவாக்கலாம். நாம் ஒருவரைப்பற்றி எண்ணிக் கொண்டிருந்தால் அவர் நேராகவோ தொலைபேசி மூலமோ கடித மூலமோ தொடர்பு கொள்கிறார் இது எமது அனுபவம். நாம் எண்ணங்களை அலையவிடாமல் ஒரே நினைவாக இருந்தால் எமது எண்ணம், எங்கு செல்ல வேண்டுமோ அங்கு சென்றடையும்.

எண்ண ஆற்றல் ஒரு கலை, இது சுவையானது நுண்ணியது, உண்மையானது. எண்ணத்திற்கு, ஆற்றல் அதிகம். உன்னுடைய ஒவ்வொரு எண்ணமும் உனக்கு எல்லாவகையிலும் உதவும். உடல் நலம், மன நலம் வாழ்க்கையில் வெற்றி உன் கூட்டுவதால் மற்றவர்கட்கு ஏற்படும் வெற்றி ஆகிய அனைத்தும் உன் எண்ணங்களைப் பொறுத்தே அமையும், அன்பும் உதவும் மனப்பான்மையோடும் ஓர் எண்ணத்தை நீ வெளியில் அனுப்பினால் உன் மூளையிலிருந்து வெளியேறி நேராகக் குறிப்பிட்ட ஆளிடமே அடைந்து அதேமாதிரியான அன்பு நிறைந்த எண்ணத்தை உருவாக்கிவிட்டு மீண்டும் உன்னிடம் இருமடங்காகும் ஆற்றலுடன் திரும்புகின்றது. வெறுப்பு நிறைந்த எண்ணத்தை நீ அனுப்பினால் அது அவனைத் துன்புறுத்தி விட்டு உன்னிடம் இரு மடங்காக துன்பத்தை உனக்கு தருகின்றது.

**"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்மை செய்து விடல்"**

திருக்குறள் வள்ளுவரும் இதைப்பல வழிகளில் வெளிப்படுத்துகிறார் **"உள்ளத்தால் உள்ளலும் தீதே"** இவ்வாறு எண்ணங்கள் பரிவு இரக்கம் அன்பு நிறைந்ததாக இருக்க வேண்டும். ஆர்வமுள்ள எண்ணங்கள் உருவாக்கிடும், ஆர்வத்தோடு செயல்படும் அன்பு அமைதி திருப்தி தூய்மை நிறைவு தெய்வீகம் இவற்றைப் பெறலாம் எனவே இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் நல்ல எண்ணங்களை வளர்த்து சமுதாயத்தை அல்ல உலகத்தையே மாற்ற முடியும் இது நான் கூறவில்லை ஸ்ரீ சுவாமி சிவானந்தா அவர்கள் கூறியது. அவருடைய **"எண்ணத்தின் ஆற்றல்"** என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது எல்லோரும் பயன்பெற வேண்டும் என்பதே என் எண்ணமாகும்.

ஈ. இராசேஸ்வரி

# நாடகம்: நட்பு பிரிவதில்லை

பாத்திரங்கள் : (அம்மா-பார்வதி, மகன்-குகன், மகள்-சுதா, குகனின் நண்பர்கள்- திவ்யா,நிதர்சன்,ரமேஸ்,நிரூயா, ஆசிரியர்)

**இடம்: பாடசாலை**

## காட்சி – 1

**நிதர்சன்** :எங்கே குகன், ரமேஸ், திவ்யா, நிரூயா எல்லேரையும் காணவில்லை ரீச்சர்

**ஆசிரியர்** :இதாலைதான் ஓடிப் பேகுதுகள் எங்கையென்று தெரியாது.

**நிதர்சன்** :ரீச்சர் நான் எதுக்கும் போய் பாக்கிறன்.

**ரமேஸ்** :நிதர்சன் குகன் இருந்தால் போல மயங்கீட்டான். அதிலைதான் வா தண்ணீர் எடுப்பம்.

**நிதர்சன்** :ஓம் வா ஏன் விழுந்தவன்?

**ரமேஸ்** :ஏன்னென்று யாருக்கு தெரியும் அவனுக்கு பிறசர் என்று சொன்னாங்கள் எனக்கு தெரியா.

**நிதர்சன்** :எனக்கு அப்படி ஒன்றும் சொல்லவில்லை சரி வா எதுக்கும் போய் பார்போம்.

**ரமேஸ்** :விலத்துங்கோ இந்தத் தண்ணியை முகத்தில் தெளியுங்கோ.

**குகன்** :ஆ..... எனக்கு என்ன நடந்தது?

**நிதர்சன்** :ரமேஸ் பிடியடா தூக்கிக் கொண்டு போய் நித்திரை செய்து ஓய்வெடுக்க விடுவம்.

(சிறிது நேரத்தின் பின்)

குகன் :திவ்யா ரமேஸ் நிதர்சனாக்களை கூட்டி வாரும்?

திவ்யா :சரி வாறன்

குகன் :ரமேஸ் எனக்கு ஏலாது அதிபரிடம் அனுமதி எடுத்து என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுங்கள்.

ரமேஸ் நிதர்சன் ஓ நாங்கள் அதிபரிடம் கேட்டு கூட்டிக் கொண்டு போகிறோம்.

நிரூயா :அவரிடம் கேட்க அவர் வீட்டை விடார். அதைவிட இங்கையே இருந்து பாடசாலை முடிவடைய எல்லோருமாக கூட்டிக் கொண்டு போய் வீட்டில் விடுவம்.

குகன் :சரி அப்படியே போவம் என்னும் கொஞ்ச நேரம் தானே.

ஆசிரியர் :குகனை பார்க்கப் போனவர்களை காணவில்லை. எங்கை என்று பார்ப்பம். என்ன எல்லோருமாக கதைக்கிறீர்கள்.

திவ்யா :இல்லை ரீச்சர் குகன் திடீரென்று மயங்கி விழுந்திட்டார் அதுதான் இங்கை கொணர்ந்து விட்டிருக்கிறோம்.

ஆசிரியர் :நண்பர்களென்றால் அப்படித்தான் இருக்க வேண்டும். சரி குகன் ஏன் மயங்கின்னி? என்ன செய்யுது.

குகன் :ஒன்றும் இல்லை ரீச்சர்

ரமேஸ் :இல்லை ரீச்சர் இவருக்கு பிறசறாம் என்று இவரது அம்மா சொன்னார்கள்.

ஆசிரியர் :பிறசறர் பொல்லாத வருத்தம் இதை மாற்ற வைத்தியம் செய்யவில்லையா?

குகன் :அதோ ரீச்சர் நடக்கிறத கதையுங்கோ ரீச்சர்.

**திவ்யா** :நாங்கள் என்றாலும் ஓரளவு அவருக்கு அக்கா அம்மா மட்டுந்தான். ரீச்சர் பயங்கர கஸ்ரம்.

**ஆசிரியர்** :அப்படியென்றால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து காசு போட்டு வைத்தியம் செய்தால் என்ன?

**நிதர்சன்,ரமேஸ்:** நல்ல யோசனை, ......................இதை பற்றி நாங்கள் வீட்டில் கேட்டு நல்ல முடிவோடு வாறோம்

**ரமேஸ்** :குகன் மெல்ல எழும்பு வா போவோம்

## காட்சி – 2

## இடம் :குகன் இல்லம்

**நிருயா** :அன்ரி அன்ரி....... இங்க வாங்கோவன்

பார்வதி :வாறேன்..... என்ன நடந்தது தம்பி

**குகன்** :ஒன்றும் இல்லை அம்மா..

**புார்வதி** :சுதா இங்கை வாவன்

**சுதா** :வாறேன் என்ன அம்மா தம்பியின் நண்பர்கள் எல்லாரும் வந்திருக்கினம்.

**பார்வதி** :ஒன்றுமில்லை பிள்ளைகள் இருங்கோ.

**நண்பர்கள்** :இல்லை அன்ரி நாங்கள் போயிட்டு நாளைக்கு விடிய வாறம். குகன் போயிட்டு வாறம்

**குகன் அம்மா**:போயிட்டு நாளைக்கு வாங்கோ..

நிதர்சன் :நாங்கள் எல்லோருமாக சேர்ந்து உன் வருத்தத்தை மாற்றுவோம் இதுதான் அவனுக்கு செய்யுற பெரிய உதவி

ரமேஸ்,நிரூயா
திவ்வியா: அப்படியே செய்வம். போயிட்டுவாரம்

## காட்சி -3

குகன் நண்பர்கள் :குகன்...... குகன்.......

பார்வதி :ஓம் வாறேன் உள்ள வாங்கோ குகன் குகன்

சுதா :இருங்கோ குகன் உன்ற நண்பர்கள் வந்துள்ளார்கள்

குகன் :வாறேன் சரி போவேமா

பார்வதி :அந்தப் பிள்ளைகள் வந்து எவ்வளவு நேரம் அவர் வார நேரத்தை பார் நல்லா செல்லம் கூடிட்டு.

குகன் :அம்மா போயிட்டு வாறம்

நண்பர்கள் :சரி போயிட்டு வாரம் அன்ரி

பார்வதி :சரி போயிட்டு வாங்கோ, கவனம்.

ரமேஸ் :உன்ர வருத்தத்தை மாற்ற எவ்வளவு பணம்செலவாகும்?

குகன் :ஒரு மூன்று லட்சம்
திவ்யா :நாங்கள் எல்லோரும் 50000 படி போட்டாகனும். இன்னும் நாள் செல்ல செல்ல உயிருக்கு ஆபத்து, வேளைக்கு சிகிச்சை செய்ய வேண்டும்

குகன் :ஏன் நீங்கள் கஸ்ரப்படுவான் வேண்டாமடா

நிதர்சன் :எங்களுக்கு காசு பெரிசில்லடா நட்பு தான் பெரிது. உனக்கு எப்ப வைத்திய சாலைக்கு போற திகதி?

**குகன்** :நாளை மறுதினம்

**நிருயா** :சரி பாடசாலை வந்திட்டு ரீச்சரிடம் கேட்போம்

**மாணவர்கள்** :வணக்கம் ரீச்சர்

**ஆசிரியர்** :வணக்கம், குகன் எப்படி சுகமாக இருக்கிறதா?

**குகன்** :ஓரளவு சுகமாக இருக்குது.

**ஆசிரியர்** :நான் ஒரு தெரிந்த வைத்தியரிடம் கோட்டேன் இப்பவே உன்னை வரும்படி கூறினார். அதிபரும் ஒம் என்றுவிட்டார்.

**திவ்யா** :ஏதோ நல்லபடியாக ஒப்பிறேசன் முடித்தால் சரி

**குகன்** :எனக்காண்டி நீங்கள் எல்லோரும் செய்யும் பெரும் உதவியை நானும் எங்களது வீடுக்காறரும் எப்படியும் மறக்க மாட்டோம்.

**ஆசிரியர்** :சின்ன உதவிதான நீயும் எனது மகன்தான்.

**நண்பர்கள்** : நண்பனுக்கு உயிரையும் கொடுப்போம் இதெல்லாம் சின்ன உதவிதான.

**குகன்** :உங்கள எனது நண்பர்கள் என்று கூற எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்குது.

**ரமேஸ்** :சரி வாகனம் வந்திட்டு வந்து ஏறுங்கோ.

**ஆசிரியர்** :குகன் அம்மாவையும் அக்காவையும் கூட்டிக் கொண்டு வாங்கோ போவம்.

**குகன்** :ஓம் ரீச்சர் அம்மா அக்கா வாங்கோ எனக்கு ஒப்பிறேசன் ஓடி வாங்கோ போவம்

**பார்வதி** : என்னன்னு எவ்வளவு பணம் கிடைத்தது? யார் தந்தது?

குகன் :எனது நண்பர்களும் ஆசிரியரும் தான்.

பார்வதி :ரீச்சர் என்னுடைய மகனுக்கு செய்த பெரும் உதவியை என்னைக்கும் மறக்க மாட்டம்.

குகன் :அம்மா அக்கா வந்து ஏறுங்க போவம்.

ரமேஸ் :கதவை சாத்துங்கோ.....

## காட்சி 4

***இடம்: வைத்தியசாலை***

நீரூயா :எல்லோரும் இறக்குங்கோ, கவனம்.

ஆசிரியர் :குகன் மட்டும் வாங்கோ கதவை திறந்து கொண்டு உள்ளே சென்று சேர் இவந்தான்.

வைத்தியர் :சரி இதிலை கிடவுங்கோ சரி ரீச்சர் நீங்கள் வெளியே போங்கோ

ஆசிரியர் :சரி சேர்

பார்வதி :ரீச்சர் என்னவாம்

ஆசிரியர் :சரி ஒப்பிரேசன் தொடங்கிட்டு ½ மணி நேரங்களின் பின்னர். வைத்தியர் வெளியில் வர

ஆசிரியர், பார்வதி,
நண்பர்கள் : ஒப்பிறேசன் நல்லபடியாக முடித்து தா சேர்.

வைத்தியர் :நல்லபடியாக முடிந்தது

*எல்லோரும் குகனிடம் சென்றனர்.*

**குகன்** :எல்லாரும் செய்த உதவிக்கு எங்கட குடும்பமே நன்றிக்கடன் பட்டிருக்கு.

**நண்பர்கள்** :எங்களுடைய நண்பரை காப்பாற்றியதற்கு அதுவே எங்களுக்கு பெரும் கொடை.


***நன்றி***


# பாடசாலை நிகழ்வுகளிலிருந்து















# விக்கினேஸ்வரம் 2009 இலிருந்து








J/VIGNESWARA COLLEGE


J/VIGNESWARA COLLEGE
STUDENTS


J/VIGNESWARA COLLEGE

# எமது உதைபந்தாட்டக் குழு





செயற்குழு 2010

VSN HOME CATERING SERVICES



**Fully vegetarian**

We are specialist in srilankan and south Indian foods. Also we do birthday parties, wedding ceremonies,Puberty ceremonies with special package.

100 string hoopers with sothi and sambal £15.00
We also make dosai, Idly, Milk hopper and Plain hopper
Rice with 5 curries and vadai payasam papadom and butter chilli.... Over 100 portion £3.00 each

**Please make the order early as possible to avoid disappointment.**

**Our reputation is your recommendation**

**3 Ockley Road , Croydon CR0 3DR**
**Tel: 0208 6659256**
**Mobile: 07802 746779**
**Mrs.Baby Vanaja Shabanathan**

**CELINE Food & Wine**

**OFF LICENCE & GROCERIES**

**6 The Parade**
**Mitcham Road**
**Croydon CR0 3HL**



***We sell Srilankan, Indian, Polish and Caribbean foods and beers, wines as a special price.***

**Opening Times:**
**Mon - Thu 8.00a.m to 10.30p.m**
**Fri & Sat 8.00a.m to 11.00p.m**
**Sun 9.00a.m to 10.30p.m**

**Tel: 0208 683 4422**

**Mail: Jeyam_3@hotmail.com**


புதிய சேவை Lewisham பகுதியில்

# NET PRINTERS

# தமிழ் அச்சகம்



உங்களுக்கு தேவையான
அழைப்பிதழ்கள்,
விளம்பரங்கள் அனைத்து
அச்சகவேலைகளும் மற்றும்
Photo copy, Fax,
Scanning, Binding
சேவையும் குறைந்த
கட்டணத்தில்
வழங்குகின்றோம்





**9 Marischal Road,**
**Lewisham**
**London SE13 5LE**

T.P: 020 8265 0219,
07804 759 760



உங்கள் திருப்தியே எங்கள் திருப்தி


VAANI FOODS
Vaani Foods
லண்டனில் முதல்தர காய்கறி இறக்குமதி
மொத்த விற்பனையாளர்கள்
CURRY POWDER
MILD
CURRY POWDER
தயாரிப்பாளரிடம் இருந்து நேரடியாக
வாடிக்கையாளருக்கு
தொலைபேசி இலக்கம்
0208 668 7648




► Mortgage ► Remortgage

BUSINESS LOANS FOR

► Shops ► Petrol Stations & Hotels

► Sales - Lettings - Mortgages

Call Pon Siva


9 St. James Road,
Croydon
Surrey CR0 2SB



Tel : 020 8683 1313
Fax : 020 8684 0444




WESTERN JEWELLERS
Jewellers & Gem Merchants
OPENING HOURS
MONDAY TO SATURDAY
10.00am - 6.30pm
SUNDAY
11.00am - 5.30pm
230 Upper Tooting Road
London SW17 7EW
020 8767 3445
SILK EMPORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 020 8672 1900
Season's best is Summer
Saree's Best is Silk Emporim Sarees
Western
Jewellers & Textiles
5,Plaza Parade,
29-33 Ealling Road,
Wembley, Middlesex
HA0 4YA
Tel: 020 8903 0909




NET PRINTERS: 020 8265 0219